விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு வார மலர்

THE EELA NADU VARAMALAR

புத்தாண்டுவாழ்த்துக்கள்!

அனைவருக்கும் எமதுஉளமகிழ்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கொடுக்கும் ஆதரவாகும்.

மில்க்வைற்
சவர்க்கா'ரத் தொழிலகம்
த. பெ எண்-77
யாழ்ப்பாணம்.

மலர் 19 பங்குனி 28 ரபிஆகிர்: 20 ஞாயிற்றுக்கிழமை [10—4—77] இதழ் 59

### கொழும்பு மேற்குத் தொகுதியில்

# ஜே. ஆரை எதிர்த்து சுந்தரர் போட்டி!

## நாராயணுக்கு செயற்கை சிறுநீரகம்!

புதுடில்லி ஏப்ரல் 9

பம்பாய் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்றுவரும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு இன்று செயற்கை சிறுநீரகம் பொருத்தப்பட்டது.

திரு. நாராயண் உடல் நலத்துடன் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறின.

# வடக்கு கிழக்கில் 30 இளைஞரை நிறுத்துவாராம்

### அவரே அறிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெய[illegible]தனவை எதிர்த்து கொழும்பு மேற்குத் தொ[illegible]யில், முன்னாள் வவுனியா எம்.பி. திரு. சி. சுந்தரல[illegible]கம் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவார்.**

இத்தகவலை நேற்று திரு. சி. சுந்தரலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் தமிழர் வாழும் பகுதிகளிலும் அடுத்த தேர்தலில் ஈழத்தமிழர் தொண்டர் சபை சார்பில் 30 இளைஞர்களைப் போட்டிக்கு நிறுத்தவிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஒவ்வொரு தொகுதியிலுமிருந்துஏற்கனவே பலர் தனிப்பட்ட முறையில் அபேட்சகராகத் தம்மைத் தெரிவுசெய்யுமாறு விண்ணப்பித்துள்ளதாகவும், ஆனால் ஒவ்வொரு தொகுதியிலும் கூடுதலான மக்கள் தெரிவுசெய்யும் 'அபேட்சகர்களையே நிறுத்தவிருப்பதாகவும் கூறினார்.

சிறைமீண்ட இளைஞர்கள் சிலருடனும் தாம் தொடர்பு கொண்டிருப்பதாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இளைஞர்களையே குறிப்பாக சிறைமீண்ட இளைஞர்களையே போட்டிக்கு நிறுத்தவிருப்பதாகவும் கூறினார்.

கிரிமலை 'மகாலிங்க [illegible]சாவில் இம்மாதம் 17-ம் திகதி முதல் தினமும் தேர்தல் பற்றிய மகாநாடு நடைபெறும் என்றும் கூறினார்.

அபேட்சகர்கள் நியமனங்களைப் பொதுமக்களே சமர்ப்பிக்கவேண்டுமெனக் கூறிய இவர் இதற்கான மனுப்பத்திரம் விரைவில் தமிழ மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறினார். (க)

### மூதறிஞர் செல்வா நிலைமை:

## ஒருவார காலத்தில் மயக்கம் தெளியலாம்

### டாக்டர்கள் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மூதறிஞர் செல்வநாயகத்திற்கு இன்னும் ஒருவார காலத்திற்குள் மயக்கம் தெளியக்கூடிய அறிகுறிகள் காணப்படுவதாக டாக்டர்கள் தெரிவித்தனர். அருகில் [illegible] அருகில் நிற்பவர்களையும் உணரக்கூடிய [illegible]த்தில் உள் உணர்வு ஏற்பட்டுள்ளதாகவும் டாக்டர் [illegible]த்தனர்.

வழக்கம்போல் நேற்றும் குழாய் மூலம், நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்பட்டன. தற்பொழுது நீர்ப்பதார்த்தங்களின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலேசாக கண்இமைகளை திறக்கக் கூடியநிலைமை ஏற்பட்டுள்ள போதிலும், கண்களால் எதிரில் உள்ளவற்றை பார்த்து உணரக்கூடிய சக்தி இன்னும், சில நாட்களில் ஏற்படலாம் எனக்கூறப்படுகிறது.

டாக்டர்கள் அருகில் நின்று இரவு பகலாக கண்காணித்து வருகின்றனர்.

இருதயம், இரத்த அமுக்கம், நாடித்துடிப்பு, மற்றும் அவயங்கள் ஒழுங்காக வேலைசெய்[illegible] டாக்டர்கள் தெரிவித்[illegible]

(10ம் பக்கம் பார்க்க)

## காவலூர் அன்ரனியன் களியாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊர்காவற்றுறை அன்ரனியன் களியாட்டுவிழா இன்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் அரங்கில் ஆரம்பமாகின்றது. கண்ணையும் கருத்தையும் கவரும் பல நிகழ்ச்சிகளைக் கொண்ட இக்களியாட்டுவிழா 17ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

# புதியகிருமிநாசினி அறிமுகம்:

## தெளித்த ஏழு பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஒருகிருமிநாசினியை மிளகாய் கன்றுகளுக்கு அடித்துக்கொண்டு நின்ற ஏழுபேர் நேற்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அறிவிழந்த நிலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட கிருமிநாசினி கடந்த வாரமளவில்தான் அறிமுகம் செய்யப்பட்டதென்றும் இதனைத் தோட்டத்தில் அடித்துக்கொண்டிருந்தவர்கள் மயக்கமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி இடைக்காட்டிலிருந்து நேற்றுமட்டும் மூன்று பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கிருமிநாசினி தெளிக்கும் போது மூக்கைமறைத்து துணி கட்டி எடுக்கப்படவேண்டிய சகல முற்பாதுகாப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இவர்கள் மயக்கமுற்றதாகக் கூறப்பட்டது.

பிரபல கம்பெனி ஒன்று இந்த கிருமிநாசினியை புழுக்களுக்காகப் புதிதாக அறிமுகம செய்துள்ளது. (ஆ)

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி தொழிற்பயிற்சிநிலையநிதிக்காக நடாத்தப்படும்

# ஈஸ்ரர் நைட்

10-4-77 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டரங்கு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வானொலி சுவர்ச்சி அறிவிப்பாளரான ஜனாப் அப்துல் ஹமீட் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க மக்கள் மனதில் நீங்காத இடம்பெற்ற சுப்பர் ஸ்ரார் குழுவின் இசை முழங்க

இலங்கை முன்னணி பொப்பிசைக் கலைஞர்களான

- ஏ. இ. மனோகரன்
- எம். எஸ். பெர்னாண்டோ
- மில்ரன் மல்லவராச்சி
- ரொனி ஹசன்
- எஸ். ராமச்சந்திரன்
- திறீ சிஸ்ரேர்ஸ்
- பேபி சந்திரிகா
- மக்ஸ்வெல் மெண்டிஸ்
- சுனில் பாரதி

ஆகியோரின் பாடல்களை ரசிக்க

பிரவேசமோ ரூ.10-00, ரூ.5-00, ரூ.2-00 மட்டுமே

த ரோரு லிமிட்டெட்.

## அ.அ.தி.மு.க.வில் சேர்ந்தார்

சென்னை, ஏப்ரல் 9

தமிழ்நாடு மேல் சட்டசபை தி. மு. க. உறுப்பினர் திரு. சாம்பசிவம் கழகத்திலிருந்து விலகி அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தில் சேர்ந்துள்ளார்.

மேல்சபையில், இவர் கட்சிக் கொறடாவாகவும் தி. மு. க. பொதுச்சபை உறுப்பினராகவும் இருந்துவந்தார்.

## பாக். ஆர்ப்பாட்டம்; பொலிஸ் துப்பாக்கிக்கு 12 பேர் 'பலி!

கராச்சி, ஏப்ரல், 9

பாகிஸ்தானில் நேற்று எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நிகழ்ந்த மோதலில் 12 பேர் கொல்லப்பட்டனர் என்றும் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

(10-ம்பக்கம்பார்க்க)

வெளிநாடுகளில் வேலை

NIET டிப்ளோமா பெறுங்கள்

விபரங்களுக்கு 2ம் பக்கம் விளம்பரம் 5871 பார்க்கவும்

5872

வலி. மேற்குப் பிரிவில்

# மிளகாய்க்கு அடிக்கும் 'சல்பர்' மருந்து தட்டுப்பாடு

## விவசாயிகள் கவலை

சங்கானை, சனி

வலி-மேற்குப் பிரிவில் மிளகாய் செடிக்குப் பிடித்துள்ள இலைச்சுருள் அல்லது 'குருமன்' எனப்படும் நோயிலிருந்து அதனை விடுவிப்பதற்கு கிருமி நாசினியுடன் கலந்து உபயோகிக்கும் 'சல்பர்' என்னும் பவுடர் அத்தியாவசியம் என விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் சிபார்சுசெய்திருந்த பொழுதிலும் இதனை இப்பகுதியில் பெறமுடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

சங்கானை, மானிப்பாய், பண்டைத்தரிப்புப் போன்ற ப. நோ. கூ. சங்கங்களிலும் இதனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் புகார்செய்துள்ளனர்.

தப்பித்தவறி பிரத்தியேகக் கடைகளில் சல்பர் இருந்தாலும் இத்தட்டுப்பாட்டை ஒரு சந்தர்ப்பமாகப் பாவித்து ரூ. 5 விற்ற சல்பரை 18 ரூபாவாக விற்கின்றனராம். இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

# கைதடி கார் விபத்தில் இருவருக்குக் காயம்!

சாவகச்சேரி, சனி

வீதியால் சைக்கிளில்சென்ற இரு சகோதரரை பின்னால் வந்துகொண்டிருந்த மோட்டார் வாகனம மோதியதால் அவர்கள் காயமடைந்தனர்.

கைதடியில் நடைபெற்ற இவ்விபத்தில் யாழ்ப்பாணம் முஸ்லிம் வீதியைச்சேர்ந்த முட்டாசு வியாபாரிகள் இருவர் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் வியாபாரம் செய்து திரும்பும்போது கண்டிக்குளியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் வாகனம் அவர்களிருவரையும மோதியது.

சைக்கிலில் ஓடியவருக்கு கையிலும் உடலிலும் காயங்களும் பின்னால் இருந்தவருக்கு தலையிலும் காயம் ஏற்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன் திரு என். குகதாசன் விசாரணை செய்தார். (க)

# அமெரிக்க பாடகர்குழு வருகிறது

கொழும்பு, சனி

உலகப் புகழ்பெற்ற லொஸ் ஏன்ஜல்ஸ் ஜூபிலிப் பாடகர் குழு இம்மாதம் 25-ம், 26-ம் தேதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இசைவிருந்தளிக்கும்.

பாடகர் குழுவை உருவாக்கிய அல்பர்ட் மக்நீல் அவர்களின் வழிநடத்தலின் கீழ் இந்த இசை விருந்து அளிக்கப்படும்.

நான்கு கண்டங்களில்பாடிப் புகழ் பெற்றுள்ள ஜூபிலிப் பாடகர்களின் ''ஆபிரிக்க-அமெரிக்கர்'' என்ற பாடல் சர்வதேச ரீதியில் பலாதும் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவில் சுவையும் சிறப்பும் மிக்க இந்த இசை அளிப்பவர்களின் வரிசையில் இவர்கள் சேர்ந்து உலகப் புகழ் ஈட்டினர்.

பிரபல திரைப்படங்களிலும் இசைத்தட்டுகளிலும் இவர்களின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சுமார் 25 நாடுகளில் தோன்றிச் சபையோரின் கரகோஷத்தின் மத்தியில் இவர்கள் இசைவிருந்து அளித்துள்ளனர்.

உலகைச் சுற்றிப் பல நாடுகளில் இன்னிசை நிகழ்ச்சிகளை நடத்தும் பணியைஇவ்வருடம் ஆரம்பித்தஇவர்கள் அமெரிக்க ராஜாங்க இலாகாவின் ஆதரவின் கீழ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.




# சிறு விளம்பரம்

## வைத்தியம்

சிறுநீர் மஞ்சளாகவோ சிவந்தோ நிறம்மாறிப்போனால் செங்கமாரி. கல்லீரலைப்பாதிக்கும் இந்நோய் முறிவுற்று முதிர்ந்தால் ஆபத்தானது. எந்நிலையிலும் இதனைக் குணப்படுத்திக் கைதேர்ந்தவர். சிறுபிள்ளைகள் வலி திரும்பிவராமற் குணப்படுத்துவார். காலவியல், தலையவியல், கபாலஇடி, சிரங்கு, குட்டம், தொய்வு, குன்மம், மாதவிடாய் கால வயிற்றுவலி அற்புதமாகக் குணப்படுத்தப்படும். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வங்களாவடி, வேலணை. 5818

## விற்பனைக்கு

உடுவில் பெண்கள் பாடசாலைக்கு 100 யார் தூரத்தில் 10 பரப்பு நிலமும், வீடும் விற்பனைக்கு உண்டு. வீட்டுக்கு சில திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. யக்கச்சி-பளை—50 ஏக்கர் நிலம் கொழும்பு கண்டி பிரதான வீதியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: Dr. S. J. சீவரத்தினம், 779, பீச்ரோட், யாழ்ப்பாணம். 5869

11—4—77 மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன் கோவில் பொங்கலன்று எமது விற்பனை வாகனத்தில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த இனும் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம் யாழ்ப்பாணம். 5826

கண்டிக்குளி: 36/12, காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. திரு. சி. துரைராசா, வழக்கறிஞர் 250, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் தொடர்பு கொள்ளவும். 5897

பரமாத்மஜோதி வெளியீடுகள் ஸ்ரீ நீலகண்டபாபா, ஸ்ரீ சத்யசாயிபாபா பகவான்களின் அஷ்டமாசித்திகளும், அற்புதங்களும், தெய்வீக மகிமைகளும் நூலாசிரியர் பரமாத்மஜோதி, ஸ்ரீசத்யதாசன் (பொறியியலுரையாளர்)காங்கேசந்துறை. 5896

சகல வசதிகளுடனும் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும் வி. எஸ். இரெட்ணம், நம், 56, கமானியார் அவென்யூ, அன்னசத்திரம் லேன், யாழ்ப்பாணம். 5881

## தேவை

தோட்டச் செய்கைக்குரிய நன்நிலமான காணி ஒரு ஏக்கர் வரை-ராஜ வீதியில் குறைந்தது மூன்றுவருட காலத்துக்கு குத்தகைக்குத்தேவை. சகல விபரங்களுடனும் கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 5865, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5865

நெசவு வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு. பிள்ளைகளுடைய நெசவு ஆசிரியர் விரும்பத்தக்கது. நேரில் வரவும். ராஜன் ரெடிமேட் காமன்ஸ், ஆடியபாதம்ரோட், கல்வியங்காடுசந்தி, யாழ்ப்பாணம். 5840

குற்றம் குறை இல்லாத தூய்மையான வலம்புரிச்சங்கு தேவை. விபரங்களுக்கு:- யோ. யோகானந்தம், 294/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 5898

### WANTED

Business Premises 400sq. ft.800 sq. ft. in Jaffna Bazaar for a Textile Establishment Reply Advt No: 5832 C/o Eelanadu Jaffna. 5882

## பயிற்சி

வெல்டிங் (மூன்று மாதம்) இலெக்றிக் வயறிங் (மூன்று மாதம்) ரேடியோ Transistor Technology (ஆறுமாதம்) இவற்றை நவீனமுறையில் பயின்று வெளிநாடு செல்லுங்கள். இலங்கையின் பலபகுதிகளில் இருந்து மாணவர்கள் இங்கே பயிலுகிறார்கள். Theory & Practicals ஒரே இடத்தில் நடைபெறுகின்றன. அடுத்தவகுப்புகள் ஏப்ரல் 18 ஆரம்பம். National Institute of Engineering Technology மைற் மண்டபம். 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5871



# ஒரு ஊதாப்பூ...!

ஆர். எஸ். சிவகுமாரன்

மாலை சரிந்துவிட்ட நேரம்... இருள் மெல்ல மெல்லமாகப் பூமியை விழுங்கி ஏப்பம்விட்டுக் கொண்டிருந்தது. அமைதியாக நீண்டு நெடுத்து படுத்திருந்த அந்த நெடிய பாதையின் வழியாக ஒரு பழைய சைக்கிளில் மெதுவாக ஆடி ஆடி சாமிநாதன் வந்து கொண்டிருந்தான். அந்தச் சைக்கிள் அவனின் மன நிலையை இம்மிதானும் புரிந்து கொண்டதோ இல்லை. அது 'கிறீச்'...'கிறீச்' என்று சப்தம் இட்டு வண்டில் போவது போல் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.

வழக்கமாக இருள் சூழுமுன் வீடு திரும்பிவிடும் சாமிநாதன் அன்று சிறிது தாமதமாகி விட்டதால் வீடுசெல்ல அவசரப்பட்டான்.

வீட்டில் வயதான நோய் வாய்ப்பட்ட அவன் தாய் அவன் வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பாள். தனது இளம் வயதிலேயே கணவனைப் பறிகொடுத்துவிட்ட சாமிநாதனின் தாய் சாமிநாதனையும் அவன் தம்பி கனகரத்தினத்தையும் படிக்க வைத்து; மனிதர்களாக அவர்களை உருவாக்குவதற்காகத் தான் காய்ந்து சருகாகி இன்று பலதரப்பட்ட நோயினால் நலிந்து படுத்தபடுக்கையாய் இருக்கின்றாள். ஆனால் அவள் தான் எடுத்துக்கொண்ட முயற்சியில் இம்மிதானும் சோடை போகவில்லை.

சாமிநாதன் பத்துமைல் தொலைவில் உள்ள பாடசாலை ஒன்றில் இப்போ ஆசிரியனாகக் கடமையாற்றுகின்றான். கனகரத்தினம் கொழும்பில் டாக்டருக்குப் படித்துக்கொண்டிருக்கின்றான். அவனுக்காகத் தான் உழைக்கும் பணத்தில் பெரும் பகுதியை சாமிநாதன் செலவழித்துக்கொண்டிருந்தான் தன்னைப் பெற்றெடுத்து ஆளாக்கிய அருமைத்தாயின் நலத்திற்காக மருந்துவகைகளுக்கு இன்னோர் தொகையை அவன் செலவழிக்கவேண்டியிருந்தது. ஒருவாறு சாமிநாதன் குடும்ப வண்டியை இழுத்துக் கொண்டிருந்தான்.

'சே... இந்தச் சைக்கிளை விற்றுப்போட்டு ஒரு நல்ல சைக்கிள் எடுக்கமுடியவில்லை' என்று சாமிநாதன் எண்ணிக் கொண்டான். மறுகணம் தன் ஆசையை நினைத்து அவனுக்கே சிரிப்பாக வந்தது. நாளாந்தம் வாழ்க்கையையே கழிக்க சிரமப்படும் போது புதுச்சைக்கிள் எடுப்பதை நினைக்க முடியுமா?

அந்தச் சைக்கிளை சாமிநாதன் பார்த்துக்கொண்டான்...'ம்'... அதுதான் எவ்வளவு பழையது. அவன் தந்தை வைத்திருந்த சைக்கிள் அது. அவன் தந்தை அந்தச் சைக்கிளை புதிதாகத்தான் வாங்கினாராம். ஒருநாள் அந்தச் சைக்கிளில் வரும்போது காரில் அடிபட்டு இறந்து போனார். அதன்பின் அந்தச் சைக்கிள் பழைய சாமான்களுடன் தேடுவாரற்றுக் கிடந்தது. சாமிநாதனுக்கு நினைவு தெரிந்த சமயம் ஒரு நாள் சைக்கிள் பழகும் ஆசையில் அதை எடுத்துச்சென்று விழுந்தெழும்பி வந்து தாயிடம் அடி வாங்கியது இன்றும் ஞாபகமாய் இருந்தது.

அதன் பிறகு அந்தச் சைக்கிள் சாமிநாதன் உடமையானது. தன் தம்பியுடன் சைக்கிளில் ஏறி ஊர் சுற்றி விழுந்தெழும்பிய நினைவுகள் சாமிநாதனின் மனதில் பசுமையாய் இருந்தது. 'ஓ...அவை தாம் எவ்வளவு இனிமையானவை.''

சாமிநாதனின் மனதில் அவனது பழைய நினைவுகள் மறைய தற்போதைய பிரச்சினைகள் தாண்டவம் ஆடின. அவனுக்கு அந்த மாதம் ஏகப்பட்ட செலவு. சம்பளப்பணம் போதாத காரணத்தால் தன் உயிர் நண்பன் வேலனிடம் நூறு ரூபாய் கடன் கேட்டிருந்தான். இன்று தருவதாக வேலன் உறுதி கூறியிருந்தான்.

வேலனை நினைக்கும்போது சாமிநாதனின் மனம்நெகிழ்ந்துவிடும். அவன் எத்தனை முறை உதவிகளை சாமிநாதனுக்கு மனம் கூசாமல் செய்திருக்கின்றான். சாமிநாதன் தாய் நேரத்திற்கு நேரம் மருந்துகளை எடுத்து உண்ணச் சிரமப்பட்டபோது சாமிநாதன் இல்லாத வேளைகளில் வேலன் தன் தங்கைசாந்தியை அனுப்பி பெரும் உதவியைச் செய்தான். சாமிநாதனுக்கு வேலன் செய்யும் உதவிகளுக்கு அவன் பிரதிபலனை எதிர் பார்த்ததில்லை.

வேலன் பெரிய பணக்காரன் இல்லை. சாதாரண விவசாயி தான். சாமிநாதனிடம் வேலன் ஒரு சமயம் 'சாமிநாதா என் தங்கையின் மனதுக்கமைந்த ... குடிவெறி இல்லாத...அடக்க ஒடுக்கமான நல்ல குணமான ஒரு மாப்பிள்ளை கிடைத்தால் சொல். பணமோ உத்தியோகமோ உள்ள மாப்பிள்ளை தான் என்பதில்லை...சாதாரண தோட்டக்காரன் என்றாலும் பரவாயில்லை' என்று சொல்லி வைத்தான்.

அதன்பேரில் சாமிநாதனும் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தான். சில தினங்களுக்கு முன் தன் சக ஆசிரியர் ஒருவரையும் இதனைப் பற்றிக் கூறிக்கேட்டிருந்தான். சாந்தியின் அழகு, குணம் என்பவற்றிற்காக மட்டும் அவளைத் திருமணம் செய்ய யாரும் முன் வரவில்லை.

'டேய் வாத்தி,-திடீரென்று குரல் கேட்டுத் திடுக்கிட்ட சாமிநாதன் பிரேக்கைப் பிடித்து சைக்கிளை விட்டு இறங்கினான். பனையின் மறைவில் இருந்து நாலு பேர் கம்பும் கழியுமாக வந்தனர். அவர்களை சாமிநாதனுக்குத் தெரியும்.

''டேய் நீ உவன் வேலன்டை சகோதரி சாந்திக்கு கலியாணம் பேசித்திரியிறயாம்''- கம்புடன் பெரிய மீசையும் வைத்திருந்த ஒருவன் கேட்டான். அவன்வாயிலிருந்து கள்ளின் நாற்றம் வீசியது.

''உன்னோடை படிப்பிக்கிறவனிட்ட அவளைக் கலியாணம் செய்யச் சொல்லி கூறினாயாமே''- அடுத்தவன் கேட்டான்.

''அவர் என்னுடைய நண்பன். சாந்தியின் அழகையும், குணத்தையும் கூறி திருமணம் செய்யுமாறு கேட்டேன்... அவர் யோசித்துப் பதில் கூறுவதாகச் சொன்னார்''

''டேய் அது யார் என்டு தெரியுமோ; எங்கட சேமனின்ட சொந்தக்காரப்பெடியன்...அந்தப் பெட்டையை அவனுக்குக்கலியாணம்செய்து வைக்க இனி முயற்சி பண்ணினியோ உன்னை உயிரோடு விடமாட்டோம்''

''ஏன் சாந்தியில் என்ன குறை?''– சாமிநாதன் கேட்டான். அவனுக்கு ஆத்திரம் மெல்ல மெல்லமாக வரத் தொடங்கியது.

''டேய்...எளிய பொருக்கி... அந்த கீழ்ச்சாதிப் பெட்டையையே உயர்சாதிப் பெடியனுக்கு கட்டிவைத்து மதிப்பாய் இருக்கிற எங்கடைதலை வரை மரியாதைகெடப் பண்ணப் பாக்கிறாய்'' ஒருவன் மீசையை முறுக்கியபடி கூறினான்.

''என்னடா கண்டறியாத சாதி...சாதிசாதி என்று இனியும் ஏமாற்ற முடியாது... அவர்களும் மனிதர் தாம்... சாதியைக்காட்டி பிழைக்கிறவர்களுக்கு இனி இங்கு இடமில்லை... இதே சாதியைப் பார்த்துத்தானே நீ அவனுக்குப் பகிடிவிட்டனி... நீங்கள் பகிடிவிட்டு சிரிக்கேக்க எங்கயடா உங்கட சாதி போனது...! நீங்கள் சிரிக்கிறதுக்குமட்டும் சாதியை மறந்துவிட்டு இப்ப என்னவோ சாதியைப்பற்றிக் கதைக்க வந்திட்டியள்''-

''டேய் என்னடா துள்ளுறாய்... உப்பிடி கணக்கக் கதைக்கிறனி அவளை கலியாணம் முடிக்கலாமே...! நான் பகிடிவிட்டால் நீ யாரடா அதை கேக்கிறது... நீ என்ன அவளின்ட புருசனே''- ஒருவன் கேட்க ''மடார்'' ''மடார்'' என்று அடிகள் மாறி மாறி சாமிநாதனுக்கு விழுந்தது. அப்படியே சுருண்டு விழுந்தான்.

சாமிநாதனுக்கு நினைவு திரும்பியபோது தனது மண்டையில் கட்டுப்போட்டு ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதைக் கண்டான். அவன் தலைமாட்டில் அவன் நண்பன் வேலன் சோகமாக அமர்ந்திருந்தான். சற்று அப்பால் கண்கலங்கியபடி சாந்தியும், அவன் தாயும் நின்றுகொண்டிருந்தனர்.

சாமிநாதன் கண்களைத் திறந்ததும் ''இப்போ எப்படி இருக்கிறது'' என்று வேலன் கேட்டான். சாமிநாதனின் முகத்தில் வரண்ட புன்னகை தவழ்ந்தது. மெதுவாக எழும்பி தலையணியுடன் சாய்ந்து கொண்டான்.

''சாமிநாதா உன்னை அடித்தவர்களை பொலிசார் பிடித்து விட்டனர்... அவர்கள் எல்லா உண்மையையும் கூறி ஒப்புக் கொண்டு விட்டனர்''– என்று கூறிய வேலன் தொடர்ந்து ''என்றாலும் என் தங்கை சாந்தியாலும் உனக்கு எவ்வளவுபெரிய துன்பம்'' என்று வேதனைப்பட்டான். ஒன்றும் பேசாமல் யன்னல் ஓரத்தில் நின்ற கொடிமரத்தை சாமிநாதன் பார்த்துக்கொண்டிருந்தான். அக்கொடியில் மலர்ந்திருந்த ஊதாப்பூக்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன.

''சாமிநாதா ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கின்றாய்''– வேலன் கேட்டதைத் தொடர்ந்து திரும்பிய சாமிநாதன் ''தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்... இனி மேல் நீ என் நண்பன் அல்ல... உன்னுடைய பேச்சைக்கேட்டு நான் எங்கோ எல்லாம் மாப்பிள்ளை தேடி அலைந்தேன்...! நான் ஒரு மடையன்... சாந்தியின் திருமணத்தைப்பற்றி இனி நான் எவருடனும் கதைப்பதில்லை... இந்த முடிவுக்கு நான் யோசித்தே வந்துள்ளேன்'' பெரிய பாராங்கல்லை உருட்டி விட்டதுபோல் கூறினான்.

விறைத்துப் போய்விட்டான் வேலன். தன் உயிர் நண்பனா இவற்றைக் கூறினான், என்று அவனால் நம்பமுடியவில்லை. சாமிநாதனின் வார்த்தைகளைக் கேட்டு சாந்தியும் திகைத்து விட்டாள்.

'வேலா...இனி நீ என் மைத்துனன்...சாந்தி என் மனைவி...'

(9ம் பக்கம் பார்க்க)





யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் எவ்வித வாழ்க்கைத் தரத்தையுடையவர்களாயினும்சரி தங்கள் அயராத உழைப்பிற்காக ஒவ்வொரு நாளும் அடுத்த நாளானது விடியும்வரை காத்திருக்கிறார்கள்.

அதேபோல, ஸ்திரமான அபரிமித இலாபத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொருவரும் எமது முதலீட்டுத் திட்டங்களில் தளராத நம்பிக்கை கொள்ளலாம். எமது முதலீட்டுத்திட்டங்கள் சூரியனைப்போல் பணத்துறையைப் பொறுத்த மட்டில் அளப்பரிய நன்மை பயப்பவை. காரணம், வரையறையற்ற இலாபகரமான பன்முக கைத்தொழில் வளங்களால் வலுவூட்டப்பட்டுவருகின்றன. பத்தாண்டு காலத்திற்குமேலாக புத்திசாலிகளான முதலீட்டாளர்கள் குறைபாடற்ற, பூரண காப்புடைய முதலீடுகளால் மேலான நன்மையடைந்துவந்துள்ளனர். இப்போது நீங்களும் இந்த நன்மைகளை அடையவேன உங்கள் வசதியைக் கருதி உங்கள் அருகில் வந்துள்ளோம்.

| குறுகியகாலம் | நீண்ட காலம் |
|---|---|
| 11% | 16% |
| வட்டியுடன் ஈடுசெய்த முதலை இலகுவாக திருப்பிப் பெறும் வசதி. | நிலையான 2 வருடங்களுக்கு வட்டி - 12% 3வருடங்களுக்கு -13% 4 வருடங்களுக்கு - 14% 5 வருடங்களும் மேலும் – 16% |

மாதாந்தம் வட்டி பெறலாம்



**உறவுஸ் அன்ட் புரொபர்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்**

யாழ்ப்பாணம் - இல 2-3, நவீன சந்தை, பெரியகடை.

கொழும்பு ஏச்பிரி கட்டடம், டி. எஸ். சேனநாயக மாவத்தை கொழும்பு 8 த. பெ. 1077.

தொலைபேசி 94356, 91471. டெலக்ஸ் –1208.

# நீதி மன்றத்தில் ஜி. ஜி. யின் சாகசங்கள்

சட்டமேதை ஜி.ஜி. பொன்னம்பலத்தின் ஜூனியராகச் சுமார் 12 வருடங்கள் கடமையாற்றியவர் வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன். 1952-ம் ஆண்டு முதல் 1965 ம் ஆண்டுவரை சுமார் 46 வழக்குகளில் ஜி. ஜி. யுடன் ஜூனியராக திரு. சண்முகநாதன் ஆஜராகினார்.

46 வழக்குகளில் ஒரு வழக்கில் கூடத் தோல்வியடையவில்லை என சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் கூறினார். இவர் அரசாங்கத்தரப்பு வழக்கறிஞராகவும் முன்னர் கடமையாற்றினார். அப்பொழுது அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஜி. ஜி.க்கு எதிராக ஒரு வழக்கில் ஆஜராகியிருந்ததையும் குறிப்பிட்டார்,

குறுக்குவிசாரணையில் தன்னிகரற்ற மன்னராகவே ஜி. ஜி. விளங்கினார் என்பது கே. வி, எஸ்ஸின் கருத்தாகும்.

ஒருவரின் சாட்சியத்தை நல்ல முறையில் பயன்படுத்

இவ்வழக்கில் பென்சனியர் ஒருவர் கொலைசெய்யப்பட்டிருந்தார். நீதியரசர் கே.டி.டி. சில்வா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைசெய்யப்பட்டது. இவ்வழக்கில் இரு எதிரிகள். ஜி.ஜி.க்கு உதவியான வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதனும், வழக்கறிஞர் எஸ். சி. கதிரவேலுவும் ஆஜராகியிருந்தனர்.

மூன்றுவது எதிரி, அரசாங்க சாட்சியாக மாறியிருந்தார். 6 நாட்கள் விசாரணை நடைபெற்றது. அந்தச் சாட்சியை 2 தினங்கள் ஜி. ஜி. குறுக்கு விசாரணை செய்தார். அச்சாட்சியே இக்கொலையைச் செய்துள்ளார் என ஜி. ஜி. குறுக்கு விசாரணை மூலம் நம்பச் செய்துவிட்டார். விசாரணை முடிவில் இரு எதிரிகளும் விடுதலைசெய்யப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கொலை வழக்குகளில் ஜி. ஜி. வல்லவராகத் திகழ்ந்தார். காரணம் அவரின் இல்லத்திலுள்ள நூல் நிலையத்தில் இவைசம்பந்தப்

நடைபெறவில்லை. விசாரணையின் பின் எதிரி விடுதலைசெய்யப்பட்டார். ஜி. ஜி.க்கு பஸ் ஊழியர் அமோக வரவேற்பு அளித்தனர். அச்சமயத்தில் மற்றும் இரு வழக்குகளில் அவர் வெற்றிபெற்றார்.

தமிழ்த் தலைவர்கள் மீதான 'ட்ரயல் அட்பார்' வழக்கில் 63 சட்டத்தரணிகளின் உதவியுடன் ஜி. ஜி. பொன்னம்பலம் சிரேஷ்ட வழக்கறிஞர்களில் ஒருவராக ஆஜராகி வாதாடினார். இலங்கையில், ஜி. ஜி. ஆஜரான கடைசி வழக்கு தமிழ்த் தலைவர்கள் மீதான 'ட்ரயல் அட்பார்' வழக்காகும். இந்தியாவில் ஜி. ஜி. ஆஜரான கடைசி வழக்கு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி மீதான மோசடி வழக்காகும். இந்த வழக்கு இன்னும் முடியவில்லை.

தமிழ்தலைவர்களான திரு. அ. அமிர்தலிங்கம், பண்டிதர் க. பொ. இரத்தினம், திரு. வி. என். நவரத்தினம், திரு. கே. துரைரத்தினம் ஆகியோர் மீது ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. திரு. அ. அமிர்தலிங்கம் மீதான வழக்கு முதலில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஜி. ஜி. ஒரு சட்டப் பிரச்னையைக் கிளப்பி பல நாட்கள் வாதாடினார்.

வழக்கில் ஆஜராவது உடல் நலத்தைப் பாதிக்கும். பூரண ஓய்வு எடுக்கவேண்டுமென ஜி. ஜி.யின் மலேஷிய வைத்திய நிபுணர் அறிவித்திருந்தும் தமிழ்த் தலைவர்கள் மீதான வழக்கில் ஆஜரானார்.

ஜி.ஜி.க்கும் அவருக்கு உதவியாக ஆஜரான 63 சட்டத்தரணிகளுக்கும் அனுசரணையாக சட்டத்தரணி கே. பாலசுப்பிரமணியம் ஆஜரானார்.

## இறுதி மூச்சு

ஜி. ஜி. தமது தொகுப்புரையை முடித்தபின் அவரை சட்டத்தரணி கே. பாலசுப்பிரமணியம் சந்தித்தார். 'எல்லாம் திருப்தியாக இருந்தது ஆனால் உங்கள் தொகுப்புரையில் 'தமிழ் ஈழம்' பற்றி எதுவும் குறிப்பிடாததுபற்றி இளைஞர்கள் கவலைப்படுகிறார்கள்' என சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் கூறினார்.

ஜி. ஜி. உடனே 'நான் நாளை அதைப் பற்றிப் பேசுவேன்' என்று கூறினார். நீதிமன்றத்தில் தமிழ் இளைஞர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். விசாரணை ஆரம்பமானதும். ஜி. ஜி. எழுந்து உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

ஜி. ஜி. அப்போது கூறியதாவது:-

தமிழன் சுயநிர்ணயம் கேட்டது இன்று நேற்றல்ல. 1947ம் ஆண்டு முதலே இக்கோரிக்கை எழுப்பப்பட்டது. அன்றிலிருந்து தமிழனுக்கு எதிராக எடுக்கப்பட்ட பல்வேறு சட்டங்களின் பாதிப்பாலேயே இக்கோரிக்கை எழுப்பநேரிட்டது. தமிழனின் மொழியுரிமை ஒரு புறம் சட்டமூலம்பறிபட, பிரஜாவுரிமை சட்டமூலம் பறிபட தமிழன் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களின் குடியேற்றத்தினல் நாட்டைப்பறிக்க எடுத்த நடவடிக்கைகளை எதிர்த்து இப்பொழுது தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் ஒரு சாத்வீக இயக்கத்தின் தலைவர்கள் மீது இந்த மாதிரியான குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்து விசாரணை நடத்துவதனல் தனக்கென ஒரு அரசு நிறுவவேண்டிய நிலைக்கு வந்துள்ளார்கள்.

ஜி.ஜி.யின் இப்பேச்சு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. எங்கும் இதே பேச்சாகவே இருந்தது. இதுவே அவரின் இறுதி மூச்சாகவும் அமைந்துவிட்டது. (முற்றும்)

### கா. யோகநாதன்

தத்தெரிந்த சட்டமேதை ஜி. ஜி. என்றும் அவர் பாராட்டினார்.

கோர்ட்டில் சாட்சிகள் ஒன்று கூறுவார்கள். ஆனல் ஜி ஜி. சம்பவத்தை வேறுவிதமாகக் கூறி, நிபுணர்களையே நம்பச்செய்துவிடுவார். அதன் பின் சாட்சியத்திலேயே முரண்பாடு ஏற்பட்டு வழக்கு நடுவிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுவிடும். இதனைத் தான் பல வழக்குகளில் அவதானித்ததாக சட்டத்தரணி கே. வி. எஸ். கூறினார்.

## சுதுமலை கொலை வழக்கு

1953-ம்ஆண்டு ஜி.ஜி.மந்திரி பதவியிலிருந்து வெளியேறிய பின், ரஞ்சனி காப்ஸ் வழக்கில் ஆஜராகி வெற்றியீட்டினார். அதைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் கோர்ட்டில் நடந்த சுதுமலை கொலைவழக்கில் ஆஜரானார். இது ஒரு பரபரப்பான வழக்கு.

பட்ட ஏராளமான புத்தகங்கள் உண்டு. வைத்திய புத்தகங்கள் மற்றும் கைரேகை அடையாள புத்தகங்கள் நிறைய வைத்திருக்கின்றார். இப்படியான புத்தகங்களை நிறையப் படித்திருக்கின்றார். இதனல் சுடப்பட்ட தூரம். சூட்டுக்காயத்தின் தன்மை அளவு பற்றி நிறைய அறிந்திருக்கிறார். இவை குறுக்கு விசாரணையில் ஜி. ஜி.க்கு உதவியாக இருந்தன.

வடபகுதியிலுள்ள தனிப்பட்ட பஸ் கம்பெனிகளுக்கிடையில் அந்நேரம் பலத்த போட்டியிருந்து வந்தது. இதனல் பஸ்ஸால் மோதப்பட்டு ஒருவர் இறந்தார். பஸ் சாரதி மீது வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது. சாரதி சார்பில் ஜி. ஜி. ஆஜரானார். ஜி. ஜி.க்கு உதவியாக சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன், சட்டத்தரணி ரி. கணேச்லிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

நீதிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் பஸ் ஊழியர் திரண்டு நின்றனர். பல இடங்களில் அன்று பஸ் சேவை

## மறைந்தனன் வெள்ளை அண்ணை

கருணையும் மறையும் என்றால்
காலமோர் உண்மையாமோ!
பொறுமையும் அழியுமாயின்
பூதலம் உறுதியாமோ!
வருவதை வாரி வாரி
வழங்கிடும் "வெள்ளையண்ணை"
எரிவதைக் கண்டபின்பும்
இருப்பதில் என்னலாபம்!

வாரிய கைகளைத்-தீ
வாயினில் இட்டோம்-அன்பு
கூறிய வாயில் கொட்டி
அரிசியைக் குவித்தோம் அண்ணன்
சீரிய கண்கள் மூடித்
சிதையிடை வைத்தோம் சாவில்
தேறிய இதயம் தன்னை
தீயடா தீயில் இட்டோம்!

அருகிலே இருந்து அண்ணன்
ஆறுதல் சொல்லும் அன்பு
உருவது நெஞ்சில் வந்து
உதிரத்தைக் கொதிக்க வைக்க
கருகிய சடலத்தோடு
கலந்து நான் சென்றிடாமல்
இருப்பதோர் கடின நெஞ்சம்
என் நெஞ்சம்! பாவி நெஞ்சம்!

ரவீந்திரன்

கலையுலகத் தொடர்புகள் — 18

# பிறந்த மண்[ணில்] எம். ஜி. ஆர்[...]

எம் ஜி. ஆர். இலங்கைக்கு விஜயம்செய்யும் பொழுது தாம் கண்டியில் பிறந்ததாகவும் அங்கும் தாம் போக விரும்புவதாகவும் தெரிவித்திருந்தார். அவர் இஷ்டப்படியே கண்டிக்குப் போகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனல் அவர் வருவதற்கு முதல் நாள் இரவு மாத்தளையிலுள்ள ஒரு பிடி வியாபாரி எம். ஜி. ஆரை வரவழைக்கும் பத்திரிகை நிறுவனத்திடம் வந்து அங்குள்ள விளம்பர முகாமையாளரோடு பேசி பத்திரிகை நிறுவனத்திற்கும் பணம் கொடுத்து மாத்தளைக்கும் எம். ஜி. ஆருக்கு வரவேற்புக் கொடுப்பதற்கான ஒழுங்கு செய்துகொண்டு போய்விட்டார். இவர் செய்திருந்த ஒழுங்கில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை. அவர் தனது வியாபார விளம்பரத்திற்கே எம். ஜி. ஆரை வரவழைக்கிறார் என்பது என் எண்ணம். அதை நான் எடுத்துக் கூறியும் பத்திரிகை நிறுவனத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. எம். ஜி.ஆர். தன்னை வைத்து ஒரு பொருளை விளம்பரம் செய்வதை விரும்பமாட்டார். அதனல் ஏற்படும் மனஸ்தாபத்திற்கு நீங்கள் தான் பொறுப்பு என்று கூறிவிட்டு நான் போய்விட்டேன்.

எம். ஜி. ஆர். வந்தபின் கண்டி விஜயத்துக்கான நாளும் வந்தது. அன்றைய தினம் எல்லோரும் புறப்பட்டு கண்டி போய்ச் சேர்ந்தோம். கண்டி றினிட்டி கல்லூரி மண்டபத்தில்தான் வரவேற்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கண்டி வரவேற்பிலும் எம். ஜி. ஆரின் நண்பருக்கு ஏதோ ஈடுபாடிருந்தது. அதனல் கண்டிப் பயணத்தில் எம. ஜி. ஆர். நண்பர் கலந்துகொள்ளாமல் முன்னதாகவே கண்டிக்குச் சென்றுவிட்டார். கண்டியில் நாங்கள் ஹோட்டலில் தங்கியிருக்கும் பொழுது எம். ஜி. ஆர். தான் பிறந்த தோட்டத்தை ஞாபகப்படுத்தப்

பார்த்தார் முடியவில்லை. ஏதோ இங்குள்ள ஒரு தோட்டத்தில்தான் நான் பிறந்தேன். அந்தத் தோட்டம் இங்குதான் உள்ளது. அதை இப்போதுவிட்டுவிட்டு இனி நடக்கவேண்டியதைக் கவனிப்போம் என்று துரிதப்படுத்தினார். ஏனெனில் கண்டி விழா முடிந்ததும் நேராக நாங்கள் கொழும்பு வந்து அங்கு ஹோட்டல் தப்ரபேனில் நடக்கவிருந்த பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள வேண்டும். முன்பு நடைபெற வேண்டிய பட்டமளிப்பு விழா, அடாது மழை பெய்ததால் நடைபெறவில்லையே; அதனல் இந்த விசேஷ ஏற்

பாடு செய்[...]
சமயத்தில் [...]
சம்பந்தப்ப[...]
நண்பர், 'ம[...]
டால் கண்[...]
விட்டது. ம[...]
கேட்டுப் ப[...]
சொல்லுங்[...]
எம. ஜி. ஆ[...]
பிடுச்சொ[...]

### எஸ். பி. மயில்வாக[...]

நான் உ[...]
அழைக்கவி[...]
நிறுவனத்த[...]
கிறேன். அ[...]
கிக்கொடுக்[...]
அதோடு [...]
பேச்சை நி[...]
குப் போக[...]
எல்லோரும்[...]
கொண்டே[...]
தான வீதில[...]
வழமைபோ[...]
கார் நகர[...]
விதமாக [...]
இடத்தைய[...]

## ஒரே விள[...]

அந்த மு[...]
வாசலில் [...]
வியாபாரியி[...]
னம்! மேலை[...]
சின்னம்! [...]
அளிக்கும் [...]
கூறப்பட்[...]
மக்கள் அ[...]
என்று. இ[...]
பரங்களைக்[...]
ஆர். 'நா[...]
கொள்ள வி[...]
தாயிற்று; [...]
கும்பிடு போ[...]
டிக்குப் பே[...]
ரூர். நான் [...]
என்றேன். [...]
தன்னை ஏ[...]
கொண்டு [...]
என்று என் [...]
நிறுவனத்தி[...]
ஆனல் மா[...]
ஒழுங்கு செ[...]

# வைரவிழா காணும் வீரசைவ மகாகுரு

கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரம மகாகுருவாக வீற்றிருநது மக்களின் ஆத்மீக வளர்ச்சிக்காக அயராதுழைத்துவரும் சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக்குருக்கள் (கைலாயதேசிகர்) அவர்கள் பங்குனித் திங்கள் 28-ம் நாள் (10-4-77) ஞாயிற்றுக்கிழமை தமது 75-வது வயதுப் பூர்த்தி வைரவிழாவைக் காணவுள்ளார்.

இவ்விழாவை வைரவிழாச் சபையினர் மிகச் சிறந்தமுறையில் பக்திமயமான பெருவிழாவாகக் கொண்டாடவுள்ளார்கள். இவ்விழாவில் மைசூர் தாருகாச்சிரமத்திலுள்ள வேதமூர்த்தி அந்தர் ஜோதிசி வீரய்யசாமி சாஸ்திரி முதலவர்களும் இலங்கை வித்தியாலங்கார வளாகத்திலுள்ள பேராசிரியர்களும் பல வீரசைவ அறிஞர்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

குருமகாசந்நிதானம் அவர்கள் யாழ்நகர் வண்ணார் பண்ணை ஐயனார் கோவிலடியைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் வீரசைவ மரபு வழித்தோன்றிய காயாரோகணக்குருக்களின் சந்நிதியைச் சார்ந்தவராவர். இவர் வீர சைவ நெறியை உலகலாய் பரப்பி உண்மையான சைவ அறிவைமக்கள் மத்தியில்போதிக்கவேண்டுமென்பதில் பேரார்வமுள்ளவர். இவர் சுன்னகம் குமாரசாமிப் புலவர் கைலாய பிள்ளை உபாத்தியாயர் ஆகியோரிடம் தமிழையும் பிரம்மஸ்ரீ பிச்சுக்குருக்கள் பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் ஆகியோரிடம் சமஸ்கிருத மொழியையும் கற்று வேதசிவாகம வல்லுனராக விளங்குகின்றார். பின் கும்பகோணம் வீரசைவப் பெரியமடம் ஸ்ரீ வீரபத்திரஸ்தாபனுசாரிய ஸ்ரீஜெகத்குரு சாந்ததேவ சாரங்க தேசிகேந்திர மஹா சுவாமிகளிடம் சென்று குருப்பட்டம் பெற்று வீரசைவ குருமகாசந்நிதானமாக விளங்குகின்றார்கள். இவர் கலைப்புலவர் நவரத்தினம், பண்டிதர் மகாலிங்கசிவம் ஆகியோருடன் தொடர்புகொண்டு பல நூல்களைப் பெற்று வீரசைவம் பற்றி மிகத் தெளிவாக ஆராய்துள்ளார்கள்.

இவர் தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு முதலிய பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த பொழுதிலும் தமிழ் மீது மிகுந்த பற்றுடையவர். வடமொழியில் சிறந்த ஆற்றலுள்ளவராக இருந்தபொழுதிலும் கல்லையும் கனியவைக்கும் அமுதத்தமிழ் மொழியிலேயே பூசைசெய்ய வெண்டுமென்ற கொள்கையினையுடையவர். மூவர் தமிழையும் அருள்மணிவாசகரின் மணிமொழிகளையும் திருமூலரினதும் மற்றும் மெஞ்ஞானிகளின் அருள்மொழிகளையும் மலர்களாகக்கொண்டு 'இட்டலிங்க பூசாத்திரட்டு' என்ற மாலையைத் தொடுத்துள்ளார். இவற்றைப் பாடி ஆலயங்களிற் பூசை செய்யலாம். இவ்வருந்தமிழ் நூலைத் தொகுத்து தமிழும் தெய்வீக மொழியே என்பதை நிலைநிறுத்தியுள்ளார். மற்றும் நித்தியகரும விதி இலிங்கோபநிடதம் என்ற கன்னட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு என்பவற்றையும் வெளியிட்டுள்ளார்கள். மக்களுக்கு விளங்கும் மொழியிலே பூசை செய்வதினல்தான் அவர்கள் மத்தியில் உண்மையான பக்தியை வளர்க்க முடியுமென்பதில் பூரண நம்பிக்கையுடையவர்.

—வ. குமாரசாமி

அன்[...]



# ...ண்ணில்
# ...ர்!

...செய்திருந்தார்கள். இச் ...த்தில் கண்டிவிழாவில் ...ந்தப்பட்ட எம். ஜி. ஆர். ...பர். 'மாத்தளை ஏற்பாட் ... கண்டி வசூல் குறைந்து ...து. மாத்தளைக்காரரிடம் ...டுப் பணம் வாங்கித் தரச் ...ல்லுங்கள்' என்றிருக்கிறார் ... ஜி. ஆர். என்னைக் கூப் ...டுச்சொன்னார்.

## ...வாகனன்

...ன் உங்களை விற்பதற்கு ...ழக்கவில்லையே! பத்திரிகை ...வனத்தாரிடம் சொல் ...ன். அவர்கள் தந்தால்வாங் ...கொடுக்கிறேன்' என்றேன். ...தாடு எம். ஜி. ஆர். ...சை நிறுத்தி மாத்தளைக் ... போகப் புறப்பட்டார். ...லோரும் காரில் ஏறிக் ...ண்டோம். மாத்தளை பிர ... வீதியை அடைந்ததும் ...மைபோல் ஜனக்கூட்டம்- ... நகரமுடியவில்லை. ஒரு ...மாக விழா நடக்கும் ...த்தையடைந்தோம்.

## ...ர விளம்பரம்

...ந்த முற்றவெளி நுழை ...சலில் நான் குறிப்பிட்ட ...பாரியின் விளம்பரச் சின் ... மேடையில் விளம்பரச் ...னம்! இன்ன கப்பெனி ...தும் வரவேற்பு. ஆனால் ...பட்...தூ மாத்தளை ...ன் அளிக்கும் வரவேற்பு ...து. இந்த வரவேற்பு விளம் ...களைக் கண்டதும் எம்.ஜி. ... 'நான் இங்கு கலந்து ...ள்ள விரும்பவில்லை. வந் ...திற்று; மேடையில் ஏறி ஒரு ...பிடு போட்டு விட்டு கண் ...குப் போய்விடுவோம்' என் ... நான் ''உங்கள் இஷ்டம்' ...றேன். எம். ஜி. ஆருக்குத் ...னை ஏமாற்றிக் கூட்டிக் ...ண்டு வந்துவிட்டோம் ...று என் மீதும் பத்திரிகை ...வனத்தின் மீதும் கோபம். ...ல் மாத்தளை வரவேற்பு ...ங்கு செய்தவரோ, நான்

எம். ஜி. ஆர். மனதை மாற்றி விட்டேன்; என் மீது பழிதீர்க் கத் திட்டம் போட்டுவிட் டார். இந்தக் கோபத்தோடு இருந்த எம். ஜி. ஆர். அதன் பின் மாத்தளையில் ஒழுங்கு செய்திருந்த எவ்வித நிகழ்ச்சி களிலும் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். இந்தப் பழியும் என் மீதுதான் விழுந் தது. மாத்தளையிலிருந்து நேராகக் கண்டிக்கு வந்து கண்டி வரவேற்பில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய எம். ஜி. ஆர். எப்பொழுதும் கைக்கடிகாரத்தைப் பார்த்த படியே உரைநிகழ்த்தினார். எப்படியோ இரவு 8 மணிக்கு கண்டி நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு பத்திரிகை நிறு வனத்தினர் கொடுத்திருந்த புதிய பென்ஸ் காரில் ஏறிக் கொழும்புக்குப் புறப்பட் டோம். எம். ஜி. ஆர். இலங் கைக்கு வந்ததே இந்தப் பட்ட மளிப்பு விழாவிற்காகத்தான்: ஏற்கனவே மழையால் ஒத்திப் போடப்பட்டுவிட்டது. இனி யும் தாமதித்தால் இன்று நடைபெறும் நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளாமல் போய் விடுவோமோ என்ற அச்சத்தில் கார் ட்ரைவரிடம் 'என்ன ஸ்பீட்லே போனாலும் பரவா யில்லை. எங்களை ஒரு மணி நேரத்தில் கொண்டுபோய் கொழும்பில் விட்டுவிடு' என் ரூர்.

கார் ஓடவில்லை பறக்க ஆரம்பித்தது. ஒரு மணிநேரத் தில் பட்டமளிப்பு விழா நடைபெறும் ஹோட்டலை வந்தடைந்தோம். காரில ருந்து இறங்கியதும் எம். ஜி. ஆர். வீரப்பனிடம் கூறி அந்த ட்ரைவருக்கு இருநூறு ருபாய் கொடுக்கச்சொன்னார். பட்ட மளிப்புவிழாவிற்குப் பத்திரிகை உலகப் பிரமுகர்கள், சினிமா சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் பெரும் புள்ளிகள் எல்லாம் வந்திருந்தார்கள். இந்த விழா விற்கு வேறொருமந்திரி தலைமை தாங்கி பட்டமளித்தார். எம். ஜி. ஆருக்கு 'நிர்த்திய சக்கர வர்த்தி' என்ற பட்டமளிக் கப்பட்டது. தன்க்கும் சரோஜாதேவிக்கும் அளிக்கப் பட்ட கௌரவத்திற்காக நன்றிகூறிப்பேசியஎம். ஜி. ஆர்; இரண்டு நாடுகளுக்குமிடையே கலாச்சார தொடர்பு ஏற்பட வேண்டும் என்று தான் எடுக்க விருக்கும் 'உலகம் சுற்றும் வாலிபன்' படப்பிடிப்பு இலங்கையிலும் நடைபெறக் கூடும் எனக் கூறினார். ஆனல் அதுதான் ந●டபெற வில்லையே!

## அஞ்சுகம் கொஞ்சிடும் சோலை!



அஞ்சுகம் கொஞ்சிடும் சோலை—தனில்
வஞ்சியர் நின்றிடும் வேளை,
விஞ்சிடும் அன்பினுல் காளை - தமிழ்
கொஞ்சிட பாடிடும் மாலை!

'பெரு'

## தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—10

# அச்சுவாகனமேறிய முதல் இந்திய மொழி தமிழே!

### வண. எம். ஏ. இரத்தினராஜா

மேற்படி கூறப்பட்ட ஐரோப்பிய குருமாரைத் தவிர தமிழ்த் தொண்டு ஆற்றிய வேறுபல குருமாரும் தமிழ் நாட்டிலும், யாழ்ப்பாணத்தி லும் வாழ்ந்து மிகச் சிறந்த முறையில் தமிழை வளர்த்த னர். இவருள் டெய்லர், பெப்ரி ஷியஸ், கிளார்க், ரெட்லர், உவின்ஸ்லோ, ட்றூ, ஷூல்ஸ், வால்த், சுவாட்ஸ், பிறிற்றோ, சார்ஜண்ட், வின்சன், உவாக் கர், கிரால் என்ற அநேகரும் தமிழ்வளர்த்த கிறிஸ்தவ தொண்டரேயாவர்.

வெற்றிவேற்கை என்ற தமிழ் நூலை, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் டெய்லர் ஆவார். பெப்ரிஷியஸ் எழுதிய ''பிரார்த்தனைப் புத்தகம்'' என்னும்நூல், சிறந்த நடை யழகும், சொல் நோக்கும், பொருள் வளமும் கொண்ட தாகும். மோட்சபிரயாணம் (Pilgrim's Progress) என் னும் நூலை தமிழில் எழுதி வெளியிட்டவரும் இவரே.

ரெட்லர், உவின்ஸ்லோ என்னுமிருவரும் சிறந்த ஆங் கில-தமிழ் அகராதிகளை ஆக்கி னர். ட்றூஜயர், நன்னூல் உரை ஆசிரியர் இராமாநுச கவிராயரிடம் தமிழ் கற்றவர்.

''இல்லையாந் தன்னிக ரென வுல கோதுறூஉ
முல்லையாந் துரு வெனு
மொளிகொள்போ தகனும்''

எனக் கவிராயரால் போற்றப் பட்டவர் இவரே.

இவ்வாறு ஆரம்பத்திலே ஐரோப்பிய கிறிஸ்தவ குருமா ரால் மிகவும் திறமையாகப் போற்றி வளர்க்கப்பட்டது மொழியின் வளர்ச்சிக்கு உரை நடை மிகவும் அவசியமாகை யால், உரை நடையைக் கொடுத்த கிறிஸ்தவ குருமா ரால் தமிழ்மொழி உயர்ந்து வளர ஆரம்பித்தது.

ஐரோப்பிய குருமாரின் அயராமுயற்சியினலேயே தமிழ்மொழி அச்சில் ஏறும் அரும் பேற்றையும் கண்டது. அச்சில் வந்த தமிழ் அனைவர்

நம் தமிழ் மொழி. அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்திலரேல்; தமிழைப் படித்திலரேல்; தமிழைவளர்த்திலரேல் இன்று தமிழ்மொழி அடைந்திருக்கும் இந்த உச்சக்கட்டத்தை ஒரு போதுமே அது அடைந்திருக் காது. அவர்கள் ஆற்றிய அருந் தொண்டின் பலனுகவே, தமிழ் மொழி உரைநடையைக் கண் டது. உரைநடையின் வழியாக உயர்வையுங் கண்டது. ஒரு

கையிலும் பட்டது. தமிழ் மொழி நூல்கள் அச்சில்வெளி யாயின. அச்சிடப்பட்ட நூல் களை அனைவரும் படித்தனர். அறிவு வளர்ந்தது. அறிவீனம் அகன்றது. அச்சுவாகனமேறிய முதல் இந்தியமொழி தமிழே! எனவே மற்றைய மொழிகளை விட தமிழ் துரிதமாகவளர்ச்சி யடைய இது ஏதுவாயிற்று. இப் பெருந்தொண்டைச் செய்தோர் ஐரோப்பிய கிறிஸ் தவ குருமாரே!

இவர்களது தொண்டு காரணமாகவே தமிழ்மொழி யில் செய்தித்தாள்கள் வெளி வரலாயின. மொழியின் வளர்ச்சிக்கு செய்தித்தாள்கள் மிகவும் முக்கியமானவையாத லால், தமிழ் மொழியில் வந்த செய்தித்தாள்கள் அம் மொழியை வளர்க்கப் பெரி தும் உதவின எனக் காண்கி ரோம்.

தமிழில் முதன் முதலாக வந்த செய்தித்தாள் 1831ம் ஆண்டு வெளியான தமிழ்த் தாள் என்னும் பத்திரிகையா கும். இது ''மிஷன்'' என்னும் கிறிஸ்தவ பிரசாரசபையால் வெளியிடப்பட்டதாகும். 1840ம் ஆண்டு சுவிசேஷ பிர பல்ல விளக்கம் என்னும் பத்தி ரிகையும் அடுத்து; நற்போத கம், பாலதீபிகை என்னும் பத்திரிகைகளும் வெளிவரலா யின. 1841ம் ஆண்டு யாழ்ப் பாணத்திலிருந்து உதய தாரகை என்னும் பத்திரிகை வெளியானது. இதற்கு ஹென்றி மாட்டின் என்பவர் முதல் ஆங்கில ஆசிரியராக வும், செத் பெய்சன் என்பவர் முதல் தமிழ் ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டனர். இது

(9-ம் பக்கம் பார்க்க)

# ஹோமியோபதியின் தந்தை!

### டாக்டர் அ. கிருஷ்ணசாமி

சீர் திருந்திய வைத்திய முறை என அழைக்கப்படும் ஹோமியோபதியை உரு வாக்கி ஹோமியோபதியின் தந்தை எனப் பெயர் பெற்ற வர் டாக்டர் ப்ரட்ரிக் சாமு வல் ஹானிமன். இப்பெரியா ரது 222-வது பிறந்த தினம் இன்று. (10-4-77) உலகம் முழுவதும் ஹோமியோபதி யர்களாலும் வெகுஜனங்களி னலும் கொண்டாடப்படுகின் றது.

டாக்டர் ஹானிமன், ஜெர் மனி தேசத்தில் உள்ள மீசன் என்ற நகரத்தில் 1755-ம் வரு டம் சித்திரை மாதம் 10-ம் திகதி பிறந்தார். இவரது தந்தை ஓர் ஏழை, வர்ணம் பூசுபவர். இவரது குடும்பம் வறுமையில் வாடினுலும், ஹானிமனது புத்திக்கூர்மை யையும் கல்வி ஆர்வத்தையும் கண்ட அவரது ஆசிரியர்கள் ஹானிமனுக்கு ஆரம்பக் கல்வியை இலவசமாக அளித் தனர். ஹானிமன் தனது தாய் மொழியான ஜெர்மனைத் தவிர்த்து ஹிப்ரு, அரேபிய, ஆங்கில, பிரான்சிய, இத்தா லிய மொழிகளிலும் புலமை பெற்றூர்.

தனது பன்னிரண்டாவது வயதிலேயே 'மனிதன் மூல மாக நவீன ஏற்பாடு' என்னும் நூலை எழுதிப் புகழ்பெற்ற ஹானிமன், வைத்தியக் கல்வியை கற்பதற்காக ஆஸ் திரியா நாட்டுக்குச் சென்று வியன்னு நகரத்திலுள்ள வைத் தியக் கல்லூரியில் சேர்ந்து தனது இருபத்தி நாலாவது வயதில் 1779-ம் வருடம் (M. D.) எம். டி. என்ற வைத்தியக் கலாநிதி பட்டம் பெற்றூர். வைத்திய தொழிலை ஆரம்பித்த இவர் தான் கற்ற அலோபதி வைத்தியத்தில் அதி ருப்தி அடைந்தார். அலோபதி யில் நம்பிக்கையிழந்து பலவித மான பரிசோதனைகளில் ஈடு பட்டார். ஏறக்குறைய 99 வித மான மருந்துகளை தனது உடம் பிலே பிரயோகித்துப் பார்த்து ஹோமியோபதி மெற்றீரியா மெடிக்காவை உருவாக்கிய துடன் சீர்திருந்திய வைத்திய மென அழைக்கப்படும் ஹோமியோபதியை உலகிற்கு அளித்தார்.

ஹானிமன் உருவாக்கிய ஹோமியோபதி தத்துவ மானது பின்வருமாறு கூறு கிறது:-

ஒருவர் ஏதாவது ஒரு திரவி யத்தை அதிக அளவில் உட் கொண்டால் அதற்குத் தகுந்த வாறு சில வியாதிக் குறிகளை சுக சரீரத்தல் உண்டாக்கு கிறது. இவ்வாறு திரவியம் சுக சரீரத்தில் உண்டாக்கும் மொத்தக் குறிகளையும் தெரிந்துகொண்டால் அம் மாதிரி திரவியத்தினது வியா திக் குறிகள் ஒருவருக்கு ஏற் பட்டால் அச்சந்தர்ப்பத்தில் திரவியத்தை குறைந்த அள வில் கொடுத்தால் அத்திர வியமே ஔடதமாகி வியா தியை நிவர்த்தி செய்யும்.

ஆனல் வியாதிக்குக் கொடுக் கப்படும் ஔடதம் அணுமய மாக்கப்பட்டதாக (வீரியப் படுத்தி) கொடுக்கவேண்டும்.

#### முயற்சியின் வெற்றி

ஹானிமனது கருத்துக்கள் ஏற்கப்பட்டு ஹோமியோபதி வைத்திய முறை உலகமெங் கும் பரவியது. தனது முயற்சி யின் வெற்றியை தனது வாழ் நாளிலேயே கண்ட ஹானிமன் 1843-ம் வருடம் மாசிமாதம் 2-ம் திகதி உயிர் நீத்தார். மருத்துவ உலகில் புதிய தத்து வத்தை தந்த அப்புரட்சி வீர ரினது கல்லறை பாரிஸ் நகரத் தில் புரட்சி வீரன் நெப்போலி யனது கல்லறைக்கு அருகி லேயே உள்ளது. ஹானிமனது வேண்டுகோளின் படி அவரது கல்லறை மீது 'நான் வாழ் நாளை வீணக்கவில்லை' எனப் பொறிக்கப்பட்டு இருக்கின் றது.

ஹோமியோபதி மருத்துவம் இன்று உலகம்முழுவதும் பரவி யதாகவும் இங்கிலாந்து, பிரே ஸில், அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், வங் காளதேசம், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பட்ட வைத்திய முறையாகத் திகழ்கின்றது.

இலங்கையில் வட இலங்கை ஹோமியோபதி சங்கம் உட் படப் பல பொது ஸ்தாபனங் களின் வேண்டுகோளை ஏற்ற அரசாங்கம் 1970-ம் வருடம் மாசிமாதம் 12-ம் திகதி ஹோமியோபதி மசோதாவை நிறைவேற்றி 1970-ம் வரு டம் மாசி மாதம் 20-ந் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் ஹோமியோ பதியை அங்கீகரித்தது. வெகு விரைவில் இலங்கை ஹோமி யோபதி கவுன்சில் அமைக் கப்படுமென அமைச்சர் கூறி யிருக்கின்றூர்.

வாழ்க ஹானிமன் நாமம்!
வளர்க ஹோமியோபதி.


வட இலங்கை
ஹோமியோபதி சங்கத்தின 15-வது
வருடாந்த மகாநாட்டிற்கும்
டாக்டர் ஹனிமனின்
பிறந்த தின விழாவுக்கும்
மனமார்ந்த வாழ்த்துகள்
உரித்தாகுக

யோகம் வைத்தியசாலை
தர்மபுரம், விஸ்வமடு.
Dr. R. நேசலிங்கம் B. S. H., L. H. M. (India)

SRI GANESHANS,
ஸ்ரீ கணேசன்ஸ்,
அந்தோனிப்பிள்ளை கட்டிடம், கிளிநொச்சி.
சிக்மா வாட்டர்பம், மின்சார உபகரணங்கள்
குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

கிளிநொச்சி மக்கள் வைத்தியசாலை
Dr. K. இராமச்சந்திரன்
டி. ஏ. எம். எஸ். (இலங்கை)
Dr. Mrs. P. இராமச்சந்திரன்
டி. ஏ. எம். எஸ். (இலங்கை)
கண்டி வீதி, கிளிநொச்சி.

மகேஸ்வரிவிலாஸ்
கண்டிவீதி, கிளிநொச்சி

டாக்டர் கே. வி. கே. ஜெயச்சந்திரமூர்த்தி
D. A. M. (இலங்கை)
ஜெயச்சந்திரா வைத்தியசாலை,
54, கண்டி வீதி, கிளிநொச்சி.

கொழும்பு றேட்ஸ்
கண்டி வீதி, கிளிநொச்சி

ஆயுர்வேத வைத்தியசாலை,
நாயன்மார்கட்டு, 160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

டாக்டர் த. க. சிவஞானம்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

# இன்று உயிர்த்தெழுந்த ஞாயிறு

# மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து!

கடவுளுக்கும் கல்லறையா? கல்லறைக்கும் காவலா? பகலவன் முன்னே பனித்துளியா? அலைகடல் முன்னே அசை துரும்பா? வாழ்வின் ஊற்று முன்னே சாவின் நாற்றமா? அன்பே தெய்வம். அவ்வன்பு சாவை வென்றது.

கல்லறையின் கற்கள் புரண்டன. காவல் வீரர் கதிகலங்கி நின்றனர். ஆயிரம் கோடி சூரியப்பிரகாசம் கல்லறையின் மேல் பிரகாசித்தது. வெண்ணிற ஆடையுடன் வெற்றிக்கொடி ஏந்திய வண்ணம், சாவை வென்ற சத்தியன் வான மண்டலத்தில் காட்சியளித்தார்.

ஓய்வுநாள் கழிந்ததும் மதிலேன் மரியாளும், மரியாளும், சலோமேயும் கல்லறைக்கு வந்தனர். கல்லறை வாயிலிலிருந்து யார் எமக்குக் கல்லைப் புரட்டிவிடுவர்? என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டனர். அவர்கள் கல்லறைக்குள் புகுந்தபோது, அங்கே வெண்ணுடை அணிந்து வலப்பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு இளைஞனைக்கண்டு திகிலுற்றனர். அவன் அவர்களை நோக்கி திகிலுறவேண்டாம். சிலுவையில் அறையுண்ட நசரேத்தூர் ஜேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்துவிட்டார். இங்கேயில்லை. நீங்கள் போய் அவருடைய சீடர்களிடமும், இராயப்பரிடமும் உங்களுக்கு முன் அவர் கலிலேயாவுக்குப் போகிறார் என்று சொல்லுங்கள்' என்றான். அவர்கள்



வெளியே வந்து கல்லறையை விட்டு ஓடினார்கள். ஏனெனில் திகைப்பும் நடுக்கமும் அவர்களை ஆட்டிக்கொண்டன.

## பல இடங்களில் காட்சி

உயிர்த்து எழுந்தபின் நாற்பது நாட்களாக தம் சீடர்களுக்கு பல இடங்களிலும் காட்சி அளித்தார். உரையாடினார். உறுதிப்படுத்தினர். உன்னத கடவுளின் உத்தம திட்டத்தை உணர்த்தினர். விண்ணரசை மண்ணில் நிறுத்தும் திண்ணமான எண்ணத்தை அறிவித்தார்.

விண்ணிலும், மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்களிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானதீட்சை அளியுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட அனைத்தையும் அவர் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்.

இதோ! நான் உலகம் முடியும்வரை எந்தநாளும் உங்களோடிருப்பேன்.

''மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. அவர் மரித்தது பாவத்திற்கென்று ஒரே தரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்''.

–(ரோமர். 6:9–10)

கிறிஸ்து நமக்காகப் பிறந்தார். நமக்காகப் பாடுபட்டார். நமக்காக இறந்தார். நம் பாவங்களை இரட்சிப்பதற்காக மீண்டும் உயிர் பெற்றார். அவர் உயிர்த்தெழுந்தபோது உண்டான ஒளி சாதாரண ஒளியல்ல அது ஞானஒளி.

பாவத்தை அழித்து புண்ணியப் பேரின்ப வீட்டிற்கு வெளிச்சம் அளிக்கும் சுடர் ஒளி.

இருள் சூழ்ந்த இதயத்தில் கருணைச் சுவாலையை வீசவைக்கும் தியாக ஒளி. அதுவே அமர ஒளி. அதுவே கிறிஸ்துவின் ஞான ஒளி.

கிறிஸ்துவின்ஞான ஒளிஉலகத்தின் எட்டுத்திக்கும் வீசுவதாக!

சமாதானத்தின் நிழலிலே உலகம் என்றென்றும் இளைப்பாறக் கிறிஸ்துவின் ஞானஒளி படர்வதாக!

மாநில மக்களெல்லாம் மனநிம்மதியோடு வாழ்ந்து, வணங்க கிறிஸ்துவின் ஞான ஒளி வழிகாட்டுவதாக!

மனிதகுலமே மாசில்லா நேசன் கிறிஸ்து பெருமானை வாழ்த்து!

உலகப் பெருமக்களே, உலகம் உய்யப் பாடுபட்ட புனிதன் யேசுநாதனை வணங்கு!

கிறிஸ்துவ சமுதாயமே! நமக்கு வழிகாட்டியாகிய யேசுநாதனுக்கு தலைவணங்கித் துதி செய்; அதுவே உனது கடமை; அதுவே உனக்கு மகிமை!

சஞ்சலங்கள் நிறைந்து
நிற்கும் சத்தி வாழ்வில்
சறுக்கிவிழும் இட
மெல்லாம் சவக்குழிகள்
தாம்
அஞ்சாமல் அவையனைத்தும்
அகன்று போக
அண்ணல் யேசு
அனுபவித்த அமரவாழ்வை
நெஞ்சார நினைத்து உள்ளம்
நெகிழ்ந்து வாழ்ந்தால்
நீங்கிவிடுமே பாவ
மெல்லாம் நிச்சயமாய்
துஞ்சாமல் தூயவனின்
வேதம் தன்னை
துதிசெய்தால் ஓடிடுமே
துயரம் யாவும்!

(ஞான ஒளி)

தொகுத்தவர்:

**எம். எம். வில்பிரட்**

---

## இப்படித்தான் இந்தியா சென்றேன்:

# இரகசிய பொலிசார் என்னையும் மனைவியையும் அழைத்துச் சென்றனர்!

**எஸ். கே. காசி**

ஜனவரி 9ந் திகதி நண்பகல் நாகூரிலிருந்து காரைக்கால் ஊடாக பாண்டிச்சேரி சென்றடைந்தோம். காரைக்காலிலிருந்து 124 கில்லோ மீட்டர் தொலைவில் பாண்டிச்சேரி இருக்கிறது. பஸ்ஸுக்கு 9 ரூபா!

பாண்டிச்சேரி பொலிஸ் நிலையத்தில் எமது சூட்கேசுகளை வைத்துவிட்டு, சென்னை புறப்படுவதற்கு முன்னர்- அங்குள்ள உல்லாசப்பிரயாணிகளைக் கவரும் சில இடங்களைப் பார்க்க முடிவுசெய்தோம். பொலிஸ் நிலையம தவிர்ந்த வேறெங்கும் எமது பெட்டிகளை வைக்கவேண்டாம் என்று நாம் பிரயாணம்செய்த பஸ்ஸில் சொல்லித்தந்தார்கள். பஸ் நிலையத்துக்கு அருகில் பொலிஸ் நிலையம் இருப்பதாகவும் சொன்னார்கள்.

நாம் அங்கு இறங்கியதும் றிக்சோ வண்டிக் காரரின் தொல்லை அதிகமாகவிருந்தது. தமிழ்நாட்டிலும் குதிரை வண்டில் காரரும், றிக்சோ வண்டிக் காரரும் இதேபோன்றுதான் தொல்லை தருவார்கள். இவர்களிடமிருந்து விடுபட்டுக்கொள்வது சுலபமான காரியமல்ல. இவர்களிடம் கதைகொடுத்து விட்டால் போதும்- நாம் தப்பித்துக்கொள்ளவே முடியாது! அழுங்குப்பிடியாக எப்படியும் எம்மை அதில் ஏற்றிவிடுவார்கள்.

நண்பர் சிவாவினது உட்பட எம்மிடம் அப்போது ஐந்து சூட்கேசுகள் இருந்தன. அவற்றைச் சுமந்து செல்வது கஷ்டம்தான். ஆயினும் றிக்சோ, குதிரைவண்டிக் காரரிடம் அகப்பட்டால் அதிகபணம் கறந்து விடுவார்களே என்று ஒரு பயம்! பஸ் நிலையத்தில் கடமையில் நின்ற பொலிஸ் கான்ஸ்டபிளின் உதவியுடன் பொலிஸ்நிலையம் சென்றோம். சுமார் 100 யார் தூரத்தில் அது இருக்கிறது.

'ஹெட் கான்ஸ்டபிளை' அணுகி நாம் இலங்கையிலிருந்து வந்துள்ளோம் என்று நிலைமையைக் கூறினோம் எமது பொருட்களை பவுத்திரமாக அங்கு வைத்துதவ அவர் முன்வந்தார். அத்துடன் பாண்டிச்சேரியில் உள்ள கண்ணாடி மாளிகை, அரவிந்தர் ஆச்சிரமம் கடற்கரை பூங்கா, பிள்ளையார் கோவில் போன்றவற்றுக்குச் சென்று திரும்ப 'றிக்சோ' ஒன்றையும் பொலிசார் ஏற்பாடு செய்தனர்.

### கண்ணாடி மாளிகை

கண்ணாடிகளினால் அமைக்கப்பட்ட அந்த மாடி மாளிகையைக் கண்டுகளிக்கும் சந்தர்ப்பம் அப்போது கிடைக்காமல் போய்விட்டது. பிற்பகல் 4 மணிக்குப்பின்னர் அதனைப் பார்க்க அனுமதிக்க மாட்டார்களாம். றிக்சோவில் சென்ற நாம் அங்கு ஏமாற்றமடைந்தோம். சுற்றுமதில்களால் சூழப்பட்டிருந்ததினால் அதனை அறவே பார்க்க முடியவில்லை. தொடர்ந்து அரவிந்தர் ஆச்சிரமம் சென்றோம். சில நிமிடநேரம் அரவிந்தர் சமாதியில் தியானத்தில் அமர்ந்தோம். பல வெளிநாட்டு வெள்ளையர்கள் அங்கு தியானத்தில் இருந்தனர். எங்கும் ஒரே அமைதி. அரவிந்தர் ஆச்சிரமத்துக்குச் சொந்தமான பல கட்டிடங்கள் அங்கு உள்ளன. எல்லாவற்றையும் சுற்றிப் பார்வையிட்டோம்.

### காந்தி, நேருஜி சிலைகள்

தொடர்ந்து கடற்கரைக்கு அழைத்தச் சென்றார் அந்த றிக்சோகாரர்- இந்துசமுத்திரம் இரைச்சலுடன் முட்டி மோதிக்கொண்டிருந்தது. பிரெஞ்சுக்காரரின் ஆட்சியில் இருந்து சில வருடங்களுக்கு முன்னர்தான் பாண்டிச்சேரி இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாக மாறியபோதிலும், அங்கும் இந்திய மண் வாசனையே வீசியது.

மகாத்மா காந்தியின் பிரமாண்டமான சிலை ஒன்று அந்தக்கடற்கரையில் எழுந்து நிற்கிறது. பின்னே காந்திஜியைப் பார்த்தபடி நேருஜி சிலைஉருவில் வீற்றிருக்கிறார், நாம் அங்கு செல்வதற்கு சில தினங்களுக்கு முன்னர்தான் பாண்டிச்சேரியின் லெவ்டினட் கவர்னர் நேருஜியின் சிலையை திரைநீக்கஞ் செய்திருப்பதை அவதானித்தோம். பாண்டிச்சேரியில் நேருஜி சிலை அமைக்கப்பட்டிருப்பதைத் தரிசித்த முதலாவது இலங்கையர்களாக நாம் இருந்திருப்போம்.

இரவு 8 மணியளவில் பாண்டிச்சேரி பொலிஸ் நிலையம் திரும்பி அதற்கு முன்னே இருந்த 'துவாரகா' ஹோட்டலில் தோசை சாப்பிட்டோம். இரவு 9 மணிக்கு பாண்டிச்சேரி- சென்னை எக்ஸ்பிரஸ் வந்தது. அதில் ஏறி அதிகாலை 1மணி 15 நிமிடமளவில் சென்னை சென்றடைந்தோம்.

நமது நாட்டு பஸ் சேவைக்கும் இந்திய பஸ் சேவைக்கும் அதிக வித்தியாசம்! பஸ்களில் அங்கு பிரயாணஞ்செய்வது விமானத்தில் பறப்பது போன்ற உணர்வு-ம்...ம்...ம்... என்ற இரைச்சலுடன் 'கடகட' சப்தமின்றி அங்கு பஸ்கள் பறக்கின்றன! ரயில் சேவைகளைவிட பஸ்சேவைகள் திறம்பட நடக்கிறது. உடம்பு அலைச்சல் எதுவுமின்றி சென்னை சென்றடைந்த நாம் டாக்ஸி ஒன்றில் சென்று ஹோட்டல் ஒன்றில் தங்கினோம்.

நாம் தங்கியிருந்த ஹோட்டலில் சகல வசதிகளும் இருந்தது. ஒவ்வொரு அறைகளுக்கும் டெலிபோன் வசதியுண்டு. முதலாவது மாடியில் 106-வது அறையில் நானும்மனைவியும் தங்கினோம். நண்பர் சிவாவுக்கு 3-வது மாடியில் 201-வது அறை கிடைத்தது. அடிக்கடி தொலைபேசியில் பேசிக்கொள்வோம்- நாளொன்றுக்கு வாடகை 20 ரூபா!

சென்னை சென்றடைந்த மறுநாள் அதிகாலை சென்னைப் பட்டினத்தைச் சுற்றிப் பார்த்தோம். என்ன பிரமாதம்! எமது வாழ்க்கையில் வெளிநாடு ஒன்றில் முக்கிய நகரமொன்றைப் பார்ப்பதற்குக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை ஒரு பாக்கியமாகவே கருதினேம். கொழும்புமாநகரிலும் பார்க்க 100 மடங்கு பெரிய பட்டினம் சென்னை என்றே சொல்லலாம். எந்நேரத்திலும் ஒரே ஜன நடமாட்டம். எங்கும் பெரிய பெரிய கட்டிடங்கள்-பசார் வீதியில் ஒரே நெரிசல்!

அன்றிரவு சுமார் 8 மணியிருக்கும். நாம் தங்கியிருந்த ஹோட்டலுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு! அந்த மணி எமது 106-ம் நம்பர் அறையில் ஒலித்தது.

றிசீவரைத் தூக்கினேன்– 'மிஸ்டர் காசிலிங்கமா!-ஆம்! பேசுகிறேன்–

'நான் மிஸ் கிருஷாந்தி சேனாதிராஜா பேசுகிறேன்'- என்று மறு பக்கத்திலிருந்து ஒரு குரல்.

'எப்போது வந்துசேர்ந்தீர்கள்-என்ன விசேஷம்!'-நான் கேட்டேன்.

தயவுசெய்து உடனடியாக நாம் தங்கியுள்ள ஹோட்டலுக்கு வரமுடியுமா என்றார் கிருஷாந்தி!

செல்வி கிருஷாந்தி சேனாதிராஜாவும் அவரது தாயாரும் இளைய சகோதரர்கள் சிலரும் நாம் திருச்சியில் தங்கியிருந்தபோது அதே ஹோட்டலில் பழக்கப்பட்டவர்கள்.

எமது களைப்பையும்பொருட்படுத்தாது அவர்கள் தங்கியிருந்தஹோட்டலுக்கு விரைந்து சென்றோம். கிருஷாந்தி தொலைபேசியில் பேசியபோது அவரது குரல் அமைதியிழந்து காணப்பட்டது. ஏதோ அவல அழைப்புப் போலத் தென்பட்டது.

அங்கு சென்றபோது கிருஷாந்தியும் தாயாரும் கவலைதோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர். எதையோ இழந்தவர்கள்போல் திகைத்து நின்றனர்.

கிருஷாந்தி சென்னையில் நடனம் பயின்றவர்-இவருக்குச் சென்னை புதியதல்ல. இருந்தும் சென்னையைச் சேர்ந்த ஒருவர் இவர்களுக்குச் சேரவேண்டிய காசோலை ஒன்றை இவர்களிடம் கையளிப்பதில் சில தடங்கல் ஏற்படுத்திவிட்டார். இதுதான் இவர்களுக்கு நடந்த கஷ்டம்!

நாம் பேசிக்கொண்டிருந்தபோது அவர்களுக்குப் பழக்கமான இலங்கை நண்பர்கள் சிலர் அங்கு வந்து நிலைமையைச் சீரடையச்செய்தார்கள். மறுநாள் தொலைபேசியில் அவர்களைத் தேடினேம்-சந்திக்க முடியவில்லை.

மறுநாள் காலையிலிருந்து எனக்கு உடல் நிலை நன்றாயில்லை-வயிற்றோட்டம் என்னை வாட்டியது! படுக்கையிலேயே இருக்கும் நிலை. மறுநாள் மனைவிக்கும் இந்நோய். எமக்மகுட்டுமல்ல 3வது மாடியில் இருந்த நண்பர் சிவாவும் இந்த நோயினல் பீடிக்கப்பட்டார்.

ஜனவரி 10-ம் திகதி முதல் 18-ம் திகதிவரை வயிற்றோட்டம் நின்றபாடில்லை. டாக்டரிடம் மருந்து எடுத்தோம். தினமும் தலை ஒன்றுக்கு 20 ரூபா 'கறந்தார்' அந்த டாக்டர்.

நண்பர் சிவாவின் நண்பரான அன்வர்-நீர்கொழும்பைச் சேர்ந்தவர்-பல வருடங்களாக சென்னையில் தொழில்

(9-ம் பக்கம் பார்க்க)



# பாசிப் பயறு



மு. நடராசா
(இளைப்பாறிய விவசாய அதிகாரி)

பாசிப்பயறு வெகுமனசி என்னும் அவரை இனக் குடும்பத்தைச் சேர்ந்தது, இரண்டு அடி உயரத்துக்கு வளரும். நல்ல கிளைகளைவிட்டு இலைகளின் அடிப்பாகத்தில் பூக்கும். பூக்களின் நிறம் மங்கல் மஞ்சளாக இருக்கும். ஒரு காயில் 10-15 விதைகள் அடங்கி இருக்கும். இந்தப் பயிர் 25-30 அங்குல மழை உள்ள இடங்களில் விளையும். மழை வீழ்ச்சி கூடியஇடங்களில்இலைவளர்ச்சி அதிகரித்து காய்கள் குறைவாகக் காணப்படும். இந்தப் பயிரை பெரும்போக அதிக மழை குறைந்தபின் நாட்டினால்தான் அதிக பலனைத் தரும். அதாவது மார்கழி நடுப்பகுதிக்குப்பின் சிலவேளைகளில் யாழ், மாவட்டத்தில் நெல் வேளாண்மை அறுவடை முடிந்தபின் எள்ளுடன் கலந்து விதைப்பார்கள். சேனைகளில் குரக்கனும், பொத்திச் சோழனுடனும் கலந்து விதைப்பார்கள்

தற்பொழுது பிறநாடுகளிலிருந்து பருப்பு வகைகள் இறக்குமதி தடை செய்யப்பட்டிருப்பதினால் இப்பயிரை இலங்கையில் உகந்த இடங்களில் சாகுபடி செய்து பாசிப்பயறு தட்டுப்பாட்டையும் நிவிர்த்தி செய்ய கூடிய வருமானத்தையும் பெறமுடியும். இப்பயிர் மற்றைய அவரை இனப்பயிர்களிலும் பார்க்க வரட்சியைக் கூடிய அளவு சகிக்கும் தன்மை கொண்டது. இந்தப் பயிரைத் தனிப் பயிராக சாகுபடிசெய்தால் கூடிய வருமானத்தைப் பெறமுயும்.

1. அவரைப் பயிர்களில் உள்ள வேர் முடிச்சுகளில் பக்ரீயாக்கள் உண்டு இவை காற்றிலுள்ள நைதரசனை நிலத்துள் சேர்த்து விடுகின்றன. அத்துடன் இப்பயிர்களின் இலைகளும் தரையில் சேரும்போது போதிய சேதன உறுப்புப் பசளை கொடுத்து நில மக்கை அதிகரித்து நில வளத்தையும் கூட்டுகின்றன.

2. பாசிப்பயறு, உழுந்து. துவரை. தட்டாப்பயறு, ஆளிங்றன் பத்தை போன்ற பருப்பு வகைகள் மாமிசம் உண்ணுதவர்களுக்கு சிறந்த புரதச்சத்துக்கொண்ட உணவாகின்றன.

## தகுந்த மண்வகையும் நடும் காலமும்

நீர்வடிமானமுள்ள ஆழமான மண்ணுள்ள தரைகள் உகந்தன. இந்தப் பயிரை படிமானமுள்ள நெல் வயல்களில் அறுவடையின் பின் சாகுபடி செய்யலாம்.

## போகம்

1. பின்மாரி-மார்கழி நடுக்கூற்றின்பின்.

2 சிறுபோகம்-பங்குனி பிற்பகுதியிலிருந்து சித்திரை நடுக்கூற்றுவரையும்.

இந்தப்பயிர் அறுவடைசெய்யும் பொழுது மழை இல்லா வரண்ட சுவாத்தியம் அவசியம் தேவை. மழை இருக்குமானால் விதைகள் கோதினுள்முளைத்து பாதிக்கப்படும்.

## இனங்கள்

1. எம். ஐ. I. பழபழப்பான பெரிய மணிகள். இந்த இனம் மகா இலுப்பலம ஆராய்ச்சி நிலையத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

2. எம். ஐ-2. சிறிய மணிகள்.

3. நை - 51. 2 மாதத்தில் விளையும் இனம்.

4. எம். ஐ - 4. இது அண்மையில் மகா இலுப்பலம ஆராம்ச்சி நிலையத்தில் எம். ஐ I × நை 51 யும் கலந்து பிறப்பிக்கப்பட்ட இனம். இது செல்வி கனகரத்தினத்தால் மகா இலுப்பலம ஆராய்ச்சி நிலையத்தில் தெரிவு செய்யப்பட்டது.

இந்த இனம் எம். ஐ-I லும் சிறிய பழபழப்பான மணிகள். இதைத்தற்பொழுதுகூடியளவு செய்யும்படி விவசாயப்பகுதியினர் சிபாரிசு செய்து விதைகளையும் சமக்காரருக்கு விநியோகித்து வருகின்ருர்கள்.

## சாகுபடிசெய்யும் நிலம்

2-3 உழவு போதுமானது. ஆழ உழவு தேவையில்லை. நாட்டுமுன் பின்வரும் பசளைகளை அடிக்கட்டுப் பசளையாக இரண்டாம் உழவுடன் மண்ணுடன் சேர்த்துவிடவும்.

1. அதி எரிகை - 1/2 அந்தர்.

2. மியூறிபேற் ஒவ் பொட்டாஸ்—1/4 அந்தர்.

6-9 அங்குலம் இடைவெளி கொண்ட நிரைகளில் விதைப்பது நலம். ஒரு நிலையத்தில் 2 கன்றுகள்விடவும். இது களைகளைக் குறைக்க நல்லமுறை.

வீச்சு விரைப்பின பிரகாரம் விதைத்தால் விதைகளை முன் கலப்பையால் அல்லது கணேவால் மூடலாம். இந்தியாவில் சில இடங்களில் நெல் அறுவடை செய்ய ஒரு கிழமைக்கு முன் விதைப்பார்கள்.

## விதைப் பிரமாணம்

1. நிரை விதைப்பு- 6 இருத்தல் ஏக்கருக்கு.

2. வீச்சு விதை- 10 இருத்தல் ஏக்கருக்கு.

## பயிர் பராமரிப்பு

இந்தப் பயிருக்கு அதிக கவனம் தேவையில்லை. விதை முளைத்து 2-3 கிழமைக்குப்பின் ஒருமுறை களைகளை அகற்ற வேண்டும். இதற்குப்பின் பயிர்கள் வளர்ந்துகளைகளை அடக்கும் பயிர்கள் முளைத்து50-60 நாட்களில்பூக்கும். இந்தநேரத்தில் 1/2 அந்தர் நவச்சார கெந்தகையை மேற்கட்டுப் பசளையாய்ப் பாவிக்கவும். பூத்து 25-30 நாட்களில் அறுவடைசெய்யலாம்.

## அறுவடைசெய்தல்

80-90 நாட்களில் அறுவடைசெய்ய முடியும். நெத்துக்கள்வெடித்துப் பறக்க முன் அறுவடைசொயவேண்டும். பனித்தண்ணீர் காயமுன் நெத்துக்களை அறுவடைசெய்ய வேண்டும். 2-3 முறை ஆகுதல் நெத்துக்களை அறுவடைசெய்ய வேண்டும். ஏனெனில் எல்லா நெத்துக்களும் ஒரே வேளையில் முற்றுவதில்லை. அதன் பின் கையால் பிடுங்கி அல்லது அரிவாளால் வெட்டி ஒரு கிழமைக்கு ஓர் இடத்தில் குவித்து வைக்கவும். பின்பு ராக்டரால் அல்லது மாட்டால் அல்லது தடியால் அடித்து தூற்றிப்புடைத்து மணிகளை 2.3 வெய்யிலில் காயவைத்த பின்புதான சேமித்துவைக்க வேண்டும்.

## பூச்சி புழுக்கள்

அக்கிரோமைசா என்னும் பூச்சி இந்தப் பயிரைத்தாக்குகிறது. இந்தப் பூச்சி இலைகளைச்சேதப் படுத்துகிறது. இதைக்கட்டுப் படுத்த 1 அவுன்ஸ் பொலிதியோன் 2 கலன் தண்ணீரில் கரைத்துத் புதைக்கவும்.

இந்தப் பயிரின் இலைகள் சில வேளைகளில் மஞ்சள் நிறம் அடைந்து காய்க்கும் தன்மையைக் குறைக்கிறது. பாதிக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி ஓரிடத்தில் தாட்கவும்.

## எதிர்பார்க்கக்கூடிய விளைவு

நல்ல போகத்தில் முற்கூறிய படி பசளை இட்டு கவனம் எடுத்து சாகுபடி செவ்தால் 700-900இருத்தல் பாசிப்பயறு மணிகளை எதிர்பார்க்கலாம்.

பாசிப்பயறு தற்போதைய சந்தையின் விலை;

1. மஞ்சள் மணிகள் கலந்த பயறு ரூபா 3/- ஒரு இருத்தல்.

தனிப் பச்சைநிறம்கொண்ட பயறு ரூபா 6/- ஒரு இருத்தல். ஏக்கருக்கு 700 இருதத்ல் வருமானம்.

1. மஞ்சள் மணிகள் தவிர்ந்த பயறு-2100ரூபா

2. தனிப் பச்சைநிறம் கொண்ட பயறு- 4200 ரூபா.

பயிர் சாகுபடி செய்ய ரூபா 500க்கு மேல்பிடியாது. சுத்த லாபம் ரூபா 3700.

முன்கூறப்பட்டஇனப்பாசிப் பயறு விதைகளை முற்கூட்டியே விவசாயப் பகுதியினரிடம் பெற்று சாகுபடிசெய்து இந்த அசல் லாபத்தை அடையுங்கள்

## பாசிப்பயற்றின் பிரயோசனங்கள்

1. காய்கள் பச்சையாய் இருக்கும்போது உடைத்துக் கறி சமைக்கலாம்.

2. காய்ந்தமணிகளை வறுத்து உடைத்துக் கறிசமைக்கலாம்.

3. முழுமணிகளை அவித்து காலைமைப் போசனதுக்குப் பாவித்து அவித்த தண்ணீரை பானமாய் பாவிக்கலாம். இப்படிப் பாவித்துவந்தால் ஒரு கிழமைக்கொரு முறை சில தோஷங்களைக் குணப்படுத்தும்.

4. விதைகளை 24 மணித்தியாலத்துக்கு தண்ணீரில் ஊற வைத்து பின்பு 2 நாட்களுக்கு ஓர் இருள்சூழ்ந்த இடததில் மூடிவைத்து முளை பெயர்ந்த பின் சமைத்தால் மிக ருசிகரமான கறியாய் இருக்கும். இந்த முறையை அனுசரித்து முட்டைபோடும் கோழிகளுக்குக் கொடுத்தால் பச்சை இலைத் தேவையையும் புரதச் சத்துதையும் கொடுக்க உதவும். முட்டை இடும் விகிதத்தையும் கூட்டலாம்.

5. பாசிப்பயறு செடிகளின் இலைகளும், தண்டுகளும், கோதுகளும் நல்ல புரதச்சத்து நிறைந்த கால்நடைத் தீனுகவும் உபயோகிக்கலாம்.

நல்ல விளைவை எதிர்பார்க்க மழை இல்லா நாட்களில் விளைவித்து மணிகள்பெற 1-2முறை நீர்ப்பாய்ச் சினுல் போதுமானது.

---

நாடகம்

# சிட்டுக்குருவியும் பருந்தும்

சொக்கன்

## காட்சி- 3

( சுப்பிரமணியம் வீடு. இராசாத்தி பத்திரிகை வாசிக்கிருள் )

இராசாத்தி- பனங்காட்டு இளம்விவசாயிகள் கழக அங்குரார்ப்பணக்கூட்டம். யாழ்ப்பாணம், மே 25 பனங்காட்டுச் சனசமூக நிலையத்தில், அண்மையில் இளம் விவசாயிகள் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. வை. சுப்பிரமணியம் பி.ஏ. தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமையுரையிலே குறிப்பிட்டதாவது "எமது நாட்டைப் பயங்கரமான பொருளாதார நெருக்கடி ஒன்று அச்சுறுத்தி வருகிறது. இந்த நெருக்கடியைப் போக்கிடும் கடமை, படித்த இளைஞர்களைத்தான் சார்ந்ததாகும். காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடி குறித்தது போல இளைஞர்கள், நாடு எமக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பாராது நாட்டுக்கு நாம் என்னசெய்ய வேண்டும் என்று ஆராய்ந்து பணியாற்ற முன்வந்தால், வறுமை விலகும்... வளம் பெருகும். எம் இலங்கை அன்னையின் புகழும் மேலோங்கும். இவ்வகையில் பனங்காட்டு இளைஞர்களாகிய நாம் மற்றக் கிராம வாலிபர்களுக்கும் வழிகாட்டும் வகையில் இன்று இளைஞர் விவசாயக் கழகத்தினை உருவாக்குகின்றேம். எமது கிராமத்தின் புறம்போக்கு நிலத்தைத்திருத்தி வசியும், வளனும் சுரக்கச் செய்வது எம் குறிக்கோளாகும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு...

திரு. சுப்பிரமணியத்தை தொடர்ந்துபல இளைஞர்களும் உரையாற்றியதன் பின்னர் கழகச் செயற்குழு அமைக்கப்பட்டது. திரு. வை. சுப்பிரமணியம் தலைவராகவும், திரு. க. செந்தூர்ச்செல்வன் செயலாளராகவும், திரு. சி. மோகனசுந்தரம் பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரியப்பட்டனர்.

இரா- சரிதான்...இனி அக்காவின்ரை கலியாணம் நடந்தாற்போலதான்... (உள்ளிருந்து வந்தபடி)

சுப்பி- ஏன் அப்படிச் சொல்லுகிருய் இராசாத்தி...

இரா- நீங்கள்தான் ஒரு விஷயத்தில் இறங்கிஞல் மற்றதையெல்லாம்மறந்துவிடுவீங்களே. இனி, கூட்டம், நாட்டம் எண்டு பகல் இரவு பாராமல் ஓடித்திரிவீங்கள். வீட்டுக் கருமங்களைக் கவனிக்கமாட்டியள்...

சுப்பி- ( சிரித்தபடி ) நான் இனி எது செய்கிறதென்ருலும் அக்காவின்ரை விவாகத்துக்குப் பிறகுதான்... பயப்படாதை... இண்டைக்கு இரவு பந்தல் போடப் போறம். செந்தில், மோகன், ராசா, பெரியதம்பி எல்லாரும் வருவாங்கள். எங்களுக்குக் கோப்பி அடிக்கடி தரவேணும்... அது உன் பொறுப்பு, உன்பாட்டுக்கு மூலையிலை போய் குறட்டை விட்டுத் தூங்கியிடாதை. தெரிஞ்சுதா...

இராசா- சரி...சின்னண்ணை போய் முகங்களுவிக்கொண்டு வாருங்கோ. இப்பவே கோப்பி போட்டுக்கொண்டு வாறன்.

இரர்சா- இராசாத்தி...இராசாத்தி... (உள்ளிருந்து கூப்பிடுகிருள்)

இராச- என்னம்மா...

இராசா- தொண்ணை என்ன செய்கிருன்... இங்கை வரச் சொல்லு...

சுப்பி- என்னம்மா (உள்ளே செல்கிருன். அடுப்படியில் எண்ணெய் கொதிக்கும் சப்தம். பொரிக்கும் ஓசை)

சுப்பி- ( நடந்துவந்தபடி ) இன்னும் உங்கடை பலகார வேலை முடியேல்லையே...

மாரிமு- அது இண்டைக்குச் சாமமாகும். இப்பதான் முறுக்கும் சுட்டு முடிஞ்சுது. பயத்தம்பணியாரம், அரியதரம், சிப்பி, சீடை எல்லாம் இனித்தான் சுடவேணும்.

சுப்பி- இதெல்லாம் பேய் வேலை மாமி. உங்கடை சிப்பி, சோகி எல்லாம் பழைசாய் போய்ச்சு. கட்லெற்ஸ், பற்றீஸ், கேக் காலம் இந்தக்காலம். பேசாமல் கோட்டல் ஒண்டிலை ஓடர் கொடுத்தால் அந்த நேரத்துக்கு வானிலை கொண்டு வந்து தந்திடுவாங்கள். உங்களைப் போலை, அம்மாவைப் போலை வயசு போனதுகள் நெருப்புக்குளிச்சு, சரியான சமயத்திலை தொண்டையடைக்க மூலையிலை போய்க்கிடக்குறது தான் இந்தப் பலகாரச் சூட்டாலை வாறபயன்.

இராச- இவனுக்கு எல்லாம் பகிடிதான். பலகாரம் சுடுகிற சாட்டிலை ஊராரை, உறவினரை ஒண்டுசேர்த்து ஒருதருக்கு ஒருதர் உதவவைக்கிறது தான் இதின்ரை நோக்கம். அதுவும் நாள்பார்த்துப் பலகாரம் சுடத்தொடங்குறனுங்கள். ஏனெண்டு தெரியுமே. கலியாணம் என்கிறது ஒரு தெய்வ காரியம். கடையிலை வாங்கிறதிலை இந்தப் புனிதம், தெய்வத்தன்மை இருக்குமே... சொல்லுபார்ப்பம்.

சுப்பி- ஊர்க்கிழடு கட்டையெல்லாம் ஒண்டு சேர்ந்து வம்பளக்கிறதுதான் பலகாரம் சுடுகிறது எண்ட- சாட்டு... (சிரிக்கிருன்) எங்கை மற்றவையெல்லாம் போயிட்டினமே. மாரிமுத்துமாமியும், அம்மாவுந்தான் மிஞ்சியிருக்கிறிய...

மாரி- எல்லாரும் இன்னும் அரைமணித்தியாலத்தில் வந்துவிடுவினம்.

சுப்பி- பாட்டிமார்மகாநாடு இடைவேளையா இது...அதுசரி என்ன சங்கதி? ஏன்... கூப்பிட்டனீங்கள்...

இராச- இந்த நோடாலகாரனோட கதைக்கேலாது. மாரிமுத்து நீதான் சொல்லு... நான் சொன்னல் முகட்டிலை ஏறிக்குதிப்பான்...

சுப்பி- (சிரித்தபடி) நான் முகட்டிலை ஏறிக்குதிச்சென்ன... மலையிலை இருந்து பாஞ்சென்ன... இறுதிவெற்றி உங்களுக்குத்தானே... யோசியாமல் சொல்லுங்கோ, அம்மா.

மாரி- அவ சொல்லத் தயங்கிரு... நானே சொல்லிவிடுறன்... கொண்ணையையும் மச்சானையும் போய்க் கலியாண வீட்டுக்கு நீ அழைச்சு வரவேணும்.

சுப்பி- என்ன... என்ன சொல்லிறியள்... மாமி... இன்னெருக்காற் சொல்லுங்கோ... அண்ணையையும், மச்சானையும் நான்போய்... அழைச்சு வாரதோ...

மாரி- இங்கையார் மோனை. நீர் அடிச்சு நீர் விலகிறதில்லை...என்ன இருந்தாலும் இந்தக் குடும்பத்தின்ரை தலைவன் அவன்தான். அவன் பத்து மைல் தூரத்தில் இருக்க... அவனுக்குச் சொல்லாமல். அவன் இல்லாமற் இந்தக் கலியாணம் நடக்கக்கூடாது.

# அகில உலக விஞ்ஞான எழுத்தாளர் மகாநாடு

—ப. கணேசன் —

பெப்பிரவரி மாதம் 14-ம் திகதி இலங்கையின் சரித்திரத்தில் முதல் தடவையாக அகில உலக விஞ்ஞான எழுத்தாளர் மகாநாடு ஆரம்பமாகியது. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வைத்தியக் கல்லூரியில் தொடர்ந்து ஐந்து தினங்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் விஞ்ஞான எழுத்தாளரை எதிர்நோக்கும் பிரச்சனைகள், விஞ்ஞான-தொழில் நுட்பச் சொற்களை ஒலி மாறுது எழுதுவதில் சில மொகளிலுள்ள சிரமங்கள், அவற்றைத் தீர்க்கும் வழிகள். விஞ்ஞான அறிவைப் பாமரமக்களுக்கு எட்டச் செய்வதற்கான வழிவகைகள், மொழிபெயர்ப்பு நுணுக்கங்கள், மொழிபெயர்க்கும் போது ஏற்படுப் சிரமங்கள் போன்ற பல விடயம்கள் பற்றி ஆராயப்பட்டன.

இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு.பீ.பீ.ஜீ.எல். ஸ்ரீவர்தன தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டை அப்போதைய லைகதொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. டீ. பீ. சுபசிங்கா மங்களவாத்தியம் முழங்கச் சம்பிரதாயமுறைப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

வைத்தியக் கல்லூரியின் போறின்சிக் மெடிசின் பேராசிரியர் திரு. என். கொட்டகொட அவர்களது அயரா முயற்சியின் விளைவாக இலங்கையில் நடைபெற்று இகில உலகின் கவனத்தையும் ஈர்த்த இம்மகாநாட்டை, அகில உலக பல்கலைக்கழக சேவைகள் ஸ்தாபனமும், கனடாவில் அகில உலக அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்தின,

கொழும்பு வைத்தியக்கல்லூரி மூளை, நரம்பியல் விரிவுரையாளர் திரு. பட்மல் டீ சில்வா 'மறதியும் ஞாபகமும்' என்னும் விடயம் பற்றியும் பாங்கொக் அபிவிருத்தி உதவித் தொடர்புச் சேவை ஸ்தாபனத்தைச் சேர்ந்த பீட்டர் ஹபேர்மன் 'தொடர்புச்சாதனங்களை அபிவிருத்திசெய்தல்' என்னும் விடயம் பற்றியும, தகவல் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. அருணு குணசேகர 'என்னென்ன பிரச்சார சாதனங்களை என்னென்ன தேவைகட்குப் பயன்படுத்த வேண்டும்' என்னும் விடயம் பற்றியும், கொழும்பு வைத்தியக் கல்லூரிப் பேராசிரியர் திரு. என். கொட்டைகொடை 'எழுதுவதன் நோக்கம்' என்னும் விடயம் பற்றியும் திரு. ஹேமா அமரசிங்க 'பிரசுரிப்பாளர்களை எதிர்நோக்கும் பிரச்னைகள்' என்னும் விடயம் பற்றியும், லேக்ஹவுஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எட்வின் ஆரியதாஸ 'பத்திரிகைகளில் விஞ்ஞானச் செய்திகளைச் சேர்ப்பதிலுள்ள சிரமங்கள்' என்னும் விடயம் பற்றியும், திரு. கொல்வின் குணவர்த்தன 'விஞ்ஞான விடயங்களை எழுதும்போது படங்களையும் உபயோகித்தல்' என்னும் விடயம் பற்றியும். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேவிட் பிறேய்றி 'விஞ்ஞான தொழில் நுட்பச் சொற்கள் உருமாறுது சகல மொழி பேசும் மக்களுக்கும் கிடைத்தல்' என்னும் விடயம் பற்றியும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் பௌதிகவியல், இலத்திரனியல் பிரிவைச் சேர்ந்த திரு. ச. ஆ. கோபாலமூர்த்தி 'தமிழ் மொழியில் B,G,F,H ஒலிகளைத் தரும் விஞ்ஞானச் சொற்களை எழுதும் முறை' என்னும் விடயம் பற்றியும், வித்தியலங்கார பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. விமல் திசநாயக்க 'விஞ்ஞானத்தைப் பிரசித்தப்படுத்தலில் மொழிகளின் பங்கு' என்னும் விடயம் பற்றியும், திரு. அலியன் டீ சில்வா 'விஞ்ஞானத்தைப் பிரசித்தப்படுத்தலில் மொழிபெயர்ப்புகளின் பங்கு' என்னும் விடயம் பற்றியும், உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த திரு. C. H. பியரத்தின 'வாசகரைக் கவரும் எழுத்துமுறைகள்' என்னும் விடயம் பற்றியும், திரு. எஸ். எம். பந்துசில 'இலங்கையில் விஞ்ஞான எழுத்துத்துறையின் சரித்திரம்' என்னும் விடயம் பற்றியும், திரு. பீ. எச். டீ. எச். டீ. சில்வா விஞ்ஞானத்தைப் பிரசித்தப்படுத்தலில் நூதனசாலைகளின் பங்கு' என்னும் விடயம் பற்றியும். திரு. ஜூல் டீ சில்வா 'விஞ்ஞான விடயங்களை றேடியோவுக்கு எழுதுதல்' என்னும் விடயம் பற்றியும், கலாநிதி ஆர்தர் கிளார்க் 'கற்பனைக் கதைகள் மூலம் விஞ்ஞான பிரச்சாரம்' என்னும் விடயம் பற்றியும் உரையாற்றினர்கள்.

ஞானத்தமிழ் — 24

# நினைப்பற நினைத்தேன்

இறைவன் உலகெலாமாகி வேறுயுடனுமாய் நிற்பன் என சைவசித்தாந்த நூல்கள் கூறும். இறைவன் அருளைப் பெற்ற அடியார்கள் இந்த உண்மையை நன்கு அறிவர்.

இறைவன் தன்மையை உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் கண்டனர். "இறைவனது திருமேனியோ விண்ணும் மண்ணும் நிறைந்து அப்பாலும் நிறைந்தும் எல்லையற்ற பேரொளியாய் எங்கும் தோற்றப் பெறும். அந்த ஒளியே நமதகத்தும் ஊடுருவிநிற்ப அதனை இறைவனருள் இல்லா வழி பிரித்தறிய முடியாது" இதனையே.

"பரத்தை மறைத்தது பார்
முதல் அண்டம்
பரத்தில் மறைந்தது பார்
முதல் அண்டம்"

எனத் திருமந்திரம் கூறும். இதனையே சற்று விளக்கமாக பரிபாடல் கூறுகிறது.

"நின் வெண்மையும் விளக்க
மும் ஞாயிற்றுள
நின் தண்மையும் சாயலுந்
திங்களுள
நின் சுரத்தலும் வண்மையும்
மாரியுள
நின் புரத்தலும் நோன்மை
யும் ஞாலத்துள
நின் நாற்றமும் வண்மை
யும் பூவையுள"

எனப்பரிபாடல் கூறுகிறது.

இதனாலே எல்லாவுலகையும் உயிரையும் தன்மேனியாகக் கொண்டவர் என்னும் சிந்தனையும், அச்சிந்தனையால் தன் மாட்டுள்ள பற்று நீங்கி எல்லா உயிரும் தன்னுயிர் போல் எண்ணி யொழுகும் கருணையும் உண்டாகும். இதனால் இறைவனை நினைப்பற நினைக்கும்நிலை தோன்றும்.

"இன்றெனக் கருளி இரு
கடிந் தென்னுள்ளத்து
எழுகின்ற ஞாயிறே
போன்று
நின்ற நின் தன்மை நினைப்
பற நினைத்தேன்
நீ அலாற் பிறிது
மாற்றின்மை"

என்பது மணிவாசகர் வாக்கு.

"நினைப்பற" என்பதற்கு வேறொன்றையும் நினையாமல் நினைந்து என்று பொருள் கூறுவர். பேரொளியில் நிற்கும் ஒருவனுக்கு அந்த ஒளிக்கு அப்பால் ஒன்று பார்க்கமுடியாமல் இருப்பது போல் இறைவன் அருளில் மூழ்கியவர்களுக்கு வேறு நினைப்பு அற்றுப்போவது இயல்பு. சிந்திக்கும் முறையில்

வ. குகசர்மா

சிந்தித்தல் என்பது இதற்கு மற்றொரு பொருளாகும். அதாவது தற்போதத்தால சிந்தியாது திருவருள் வழியாற் சிந்தித்தலாம். இதனையே "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்று மணிவாசகர் கூறினர்.

இறைவன் இன்பத்தைவிரும்புவர்கள் விருப்பு, வெறுப்பு, வேண்டுதல் வேண்டாமை ஆகிய தன்மைகள் அற்றவர்கள் அவைபோலவே மறப்பும், நினைப்பும் அற்றவர்கள். "நாயகன் சேவடி தைவரு" சிந்தையுடையார்கள் நினைக்கமுடியுமா? அல்லது மறக்கமுடியமா? அடியார் ஒருவர் தம்மை மறந்து விடுவாரோ என்று இறைவன் நினைத்து அவர் உள்ளத்தைக் கவர்ந்து அதையே தம் இருப்பிடம் ஆக்கிக் கொள்ளுகிறான். வெளியில் ஆலயத்தில் மழையில் வெப்பத்தில் சூரிய சந்திரர்களில் கண்ட இறைவன் உள்ளத்திலே நின்றால் மறக்கமுடியுமா. மணிவாசகர் "நினைப்பற நினைத்தல்" பற்றிக் குறிப்பிட்டார். நம்மாழ்வார் மறப்பறநினைத்தல் பற்றிக் குறிப்பிட்டார். மறப்பும், ஞானமும், தாம் அறியவில்லை என்றே அவரும் பாடினார். மறப்பதும், நினைப்பதும், தன்செயலில்லை என்று பாடுவது ஊன்றி நோக்கத்தக்கது.

"மதப்பும் ஞானமும் நான்
ஒன்று உணர்ந்திலன்
மறக்கும் என்று செந்தாம
ரைக் கண்ணொடு
மறப்பு அற என்னுளே மன்
னினன் தன்னை
மறப்பனோ இனியான் என்
மணியையே"

# யாழ் பூங்காவில் பயங்கரக் கரடி!

—வர்ணம் —

பொலிஸ் அதிகாரியின் மூளை தீவிரமாக வேலைசெய்ய ஆரம்பித்ததற்கு காரணமில்லாமலில்லை.

சர்க்கஸ் கம்பனியிலிருந்து காணாமல்போன கரடிதான் பூங்காவில் ஒளித்துக்கொண்டிருக்கிறதோ! என்பதுதான் அவரது யோசனை. உடனே பூங்காவில் கரடி ஒன்று ஒளித்துக் கொண்டிருக்கும் சங்கதி தெரியுமாவென்று சர்க்கஸ் மனேஜரிடம் அவர் கேட்டார்.

இந்த விஷயம் கேள்விப்பட்டவுடன் முகமெல்லாம் பல்லாக இளித்தார் சர்கஸ் மனேஜர்.

"இது எங்களுக்கு முன்பே தெரியாமல் போய்விட்டதே. பூங்காவில் கரடி இருக்கும் சங்கதி தெரிந்திருந்தால் உங்களுக்கு சிரமம் கொடுக்காமலே அதைப்பிடித்திருப்போம்" என்றார் சர்க்கஸ் மனேஜர். பிறகு "என்றாலும் ஒரு விஷயம் இந்தக்கரடி மற்றக் கரடிகளைப் போலில்லை. கோபம் வந்துவிட்டால் பயங்கரமாக மாறிவிடும். அதுவும் தப்பிப்போக முயற்சிசெய்யும்போது அதனிடம் யாரும் நெருங்க முடியாது. அதனால் நீங்கள் தான் எங்களுக்கு கொஞ்சம் உதவிசெய்யவேண்டும்" என்று பொலிஸ் அதிகாரியிடம் கெஞ்சலானார். "நீங்கள் உதவி கேட்டாலும், கேட்காவிட்டாலும் காட்டுமிருகம் ஒன்று இப்படி சுதந்திரமாக நகரில் திரிய அனுமதிக்க முடியாது. கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளப் போகிறோம்" என்றார் பொலிஸ் அதிகாரி.

"ஐயோ சேர், அப்படி ஏதும் செய்துவிடாதீர்கள். அதைப் பிடிப்பதற்கு உதவிசெய்தால் போதும்"

"என்னமாதிரி உதவி"

"பூங்காவில் நாங்கள் எங்கள் ஆட்களைவிட்டு கரடியை மடக்கி கூட்டுக்குள் அடைக்க முயற்சிசெய்வோம். நீங்கள் உங்கள் ஆட்களைக் கொண்டு பூங்காவைச்சுற்றி காவல் போட்டால் நல்லது. கரடி தப்பிப்போய்விடாமல் பார்த்துக் கொண்டால் போதும்"

"அதுசரி, நீங்கள் கரடியைப்பிடிக்க முயலுங்கள். எந்தக் காரணம்கொண்டும் பூங்காவிலிருந்து அது தப்பி வெளியில் வந்ததோ- 'டுமீல்' பிறகு எங்களை குறைசொல்லக்கூடாது".

"அப்படி செய்யக்கூடாது சேர், எப்படியும் அதை உயிருடன் பிடிக்கத்தான்வேண்டும். அது இல்லையென்றால் சர்க்கஸ் கம்பனியே குளோஸ். வேடிக்கை பார்க்க ஆட்களே வரமாட்டார்கள்".

"கரடியை உயிரோடுபிடிக்க வேண்டும் என்பதற்காக நான் எங்கள் ஆட்களை பணயம் வைக்க முடியாது. அத்துடன் அது வெளியில் புறப்பட்டு ஓடத்தொடங்கினால் பொது சனங்களுக்கும் ஆபத்து"

இப்படிக் கூறிய பொலிஸ் அதிகாரி திடீரென எதையோ நினைத்துக்கொண்டவர்போல், உதவி பொலிஸ் அதிகாரியை அவசரமாக அழைத்தார். அவர் வந்ததும் "பொலிஸ் ஜவான்களை யெல்லாம் மூன்று ஜீப்களில் ஏற்றி தயாராய் வையுங்கள்; நான் இதோவந்து விடுகிறேன். அதற்குள் ஒரு 'ஜீப்'பில் சிலரை ஒலிபெருக்கியுடன் அனுப்பி மறு அறிவித்தல்வரை எவரையும் நகரில் நடமாடவேண்டாம் என்று அறிவித்தல் கொடுக்கச்சொல்லுங்கள். அறிவிப்பது நமது கடமை, மீறி நடக்கிறவர்கள் கரடியிடம் மாட்டிக்கொண்டு என்னபாடும்படட்டும்" என்று கூறிவிட்டு நிறுத்தினார். உதவி அதிகாரி புறப்பட்டதும் சர்க்கஸ் மனேஜரிடம் திரும்பி, "மிஸ்டர் எங்கள் வீரர்கள் எல்லாம் பூங்காவைச்சுற்றி நிற்பார்கள். இல்லை...ஜீப்பில் பூங்காவைச் சுற்றி வலம்வந்து கொண்டிருப்பார்கள். நீங்கள் பூங்காவுக்குள் ஆட்களை அனுப்பி கரடியைப்பிடித்து விட வேண்டும். இல்லையென்றால் நாங்கள் அதைச்சுட்டுத் தள்ளிவிடுவோம்" என்று எச்சரித்தார். இந்த ஏற்பாட்டுக்கு சர்க்கஸ் மனேஜரும் ஒத்துக் கொண்டார்.

கரடியொன்று சர்க்கஸ் கம்பனியிலிருந்து தப்பிச் சென்று பூங்காவில் பதுங்கிக் கொண்டிருக்கும் சங்கதி நகரில் அறியாமல் இருந்தவர்களுக்கும் பொலிஸ் அறிவித்தல் மூலம் தெரியவந்துவிட்டது. பொலிசார் கரடியைப்பிடிக்க ஏற்பாடுகள் செய்கிறார்கள் என்பதும் நகரில் பரவவே பொதுமக்கள் ஏராளமானவர்கள் வேடிக்கைபார்க்க திரண்டு வர ஆரம்பித்தார்கள். இவர்களை எல்லாம் கட்டுப்படுத்தி பூங்காவுக்கு அருகில் வராமல் தடுத்து வேறு திசைதிருப்பி விடுவதற்கு ஆங்காங்கே திருப்பங்களிலும், சந்திகளிலும் பொலிசாரை நிறுத்தவேண்டியேற்பட்டது. இதற்கு பொலிஸ் ஜவான்கள் போதாமல் போகவே அவசர செய்தி அனுப்பி, ராணுவ முகாமிலிருந்தும், கடற்படைத் தளத்திலிருந்தும் சிப்பாய்களை பொலிஸ் அதிகாரி தருவித்தார். வந்தவர்கள் அனைவரும் ஜீப்களில் இருந்தபடியே தம் பணிகளை செய்யத்தொடங்கினார்கள். வேடிக்கை பார்க்க வந்த சாதாரன மக்களைத் தவிர காவலுக்கு வந்த சிப்பாய்கள் எவரும் ஆயுதங்களுடன் 'ஜீப்'களை விட்டு கீழே இறங்கவில்லை. அவ்வளவு துணிவு!

யாழ். பொலிஸ் அதிகாரியின் தலைமையில் யாழ். பூங்காவைச் சுற்றி பொலிஸ்படை ஜீப்களில் ஆயுதங்களுடன் காவலுக்கு நின்றது.

பூங்காவின்வாயிலில் சர்க்கஸ் கம்பனியினர் கரடிக்கூடு ஒன்றைக் கொண்டுவந்து வைத்தார்கள். பூங்காவில் பதுங்கியிருக்கும் கரடி தான் தப்பி வந்ததை மறந்துவிட்டு சர்க்கஸ் கம்பனியில் இருக்கும் நினைப்பில் மீண்டும் கூட்டில் ஏறிக்கொள்ளும் என்பது அவர்கள் நினைப்பு. ஆனால் அந்த அளவுக்கு அந்தக்கரடி 'இளிச்சவாய்க்' கரடியாகத் தெரியவில்லை.

இதற்கு பக்கத்திலுள்ள மாநகரசபை வாயில்களை எல்லாம் இறுக்கிப் பூட்டிவிட்டு அங்கே இருந்த ஊழியர்கள் எல்லாம் மேல்மாடிக்கு ஏறிக்கொண்டு விட்டார்கள்.

கூட்டம் நடத்திக் கொண்டிருந்த மேயரும் மெம்பர்களும் கூட செய்வதொன்றும் அறியாமல் கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டு, மேல்மாடி ஜன்னல்கள் வழியாக பூங்காவை எட்டிப்பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். கரடி மாநகரசபைக்குள் புகுந்து விட்டால் என்ன செய்வது?

இந்த எண்ணம் ஏற்பட்டதோ இல்லையோ, மேயர் உடனே உறுப்பினர்களை அழைத்து மந்திராலோசனை செய்தார். பிறகு மாநகரசபை வாயில்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு காவல்காரர்களை துப்பாக்கிகளுடன் காவல்புரிய நியமிப்பதென முடிவுசெய்யப்பட்டது. ஆனால் உடனே ஆள் கிடைக்கவில்லை. அதனால் ஊழியர்களே அந்தப்பணியைச் செய்ய முன்வந்தனர். ஆனால் அவர்கள் கீழ்மாடிக்குவர முடியாது மேல்மாடியில் இருந்தபடியே துப்பாக்கிகளுடன் காவல்புரிவதாக ஒப்புக்கொண்டனர். அதனை சபை ஏற்றுக் கொண்டது.

இது இவ்வாறு இருக்க பூங்காவில் கரடியைப் பிடிப்பதற்காக இரண்டு நபர்களை அனுப்ப சர்க்கஸ் மனேஜர் முடிவுசெய்தார். ஒருவர் சர்க்

(9-ம் பக்கம் பார்க்க)

## தொட்டியில் விழுந்த மீன்!

நகராட்சி குழாயிலிருந்து என்குளியல்தொட்டியில் ஒரு மீன் விழுந்துள்ளது என்று நாக்ஸ்வில் (டென்னிஸி, அமெரிக்கா) நகரப் பெண் ஒருவர் குடி நீர் வசதி நிர்வாகியிடம் புகார் செய்தார். அது சாத்தியமே அல்ல. டென்னிஸி நதியிலிருந்து வரும் தண்ணீர் பல ஃபில்டர்கள் மூலம் வடிகட்டப்படுகிறது என்று அந்த அதிகாரி மறுத்தார். ஆனல் குழாய் நீரிலிருந்து மீன் விழுந்தது உண்மை. இரண்டு செண்டி மீட்டர் நீளமுள்ள செத்த மீன் அது என்று அந்தப் பெண் கூறினர்.

ஆதாரம்: நியூடைம்ஸ்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சித்தூர் ராணி
பத்மினி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவகுமார்-ஜெயசுதா
பட்டிக்காட்டு ராஜா

Daily 4 Shows
RIO (Jaffna)
KING OF MOUNTAIN

REGAL (JAFFNA)
Daily at 4 45,7-00&9-30p.m.only
KENNETH HAIGH
NANETTE NEWMAN
in
MAN AT THE TOP
(Adults only) (Color)

10-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வீரத் திருமகன்
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்]
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி,கே. ஆர்.விஜயா
[யாழ். நகர்] பத்மினி நடித்த
தினசரி 10-30,2-30,6-30,9-45.
இருமலர்கள்
(புதியபிரதி)

ஸ்ரீதர் ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
எம். ஜி. ஆர்—வீரப்பா
சாவித்திரி நடித்த
இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
மகாதேவி
நாளை முதல் ஜெமினி-சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா
(புத்தம் புதிய பிரதி)

ராணி [யாழ்நகர்]
கே. பாலசந்திரன் - சுபாஜினி
தினசரி 4 காட்சிகள்
"பொன்மணி"


# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சாமிநாதன் தொடர்ந்து கூறியபோது ஒருவராலும் ஒன்றும் பேசமுடியவில்லை.

இமைகள்படபடக்கவிழுங்கி விடுவது போல் சாந்தி சாமிநாதனைப் பார்த்தாள்.

பலமாக வீசிய காற்றில் ஒரு ஊதாப்பூ சாமிநாதனின் மடியில் வந்து விழுந்தது. அம் மலர் சாமிநாதனைப் பார்த்துக் கண் சிமிட்டுவது போல் இருந்தது. மெதுவாக இரண்டு கரங்களினாலும் அதை சாமிநாதன் எடுத்துக் கொண்டான்.

(யாவும் கற்பனை)

# இரகசிய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துபவர்-எமக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து தந்தார். டாக்டரிடமும் கொண்டு செல்ல றிக்சோவுடன் ஹோட்டல் வாசலில் எமக்காகக் காத்து நிற்பார்!

## தயிரும் சோறும்!

தயிருடன் சோறு சாப்பிடுமாறு டாக்டர் ஆலோசனை கூறினர். நமது நாட்டில் வயிற்றோட்டக்காரருக்கு சோற்றைக் கண்ணிலும் காட்டமாட்டார்கள். அங்கோ தயிருடன் சோறு சாப்பிடும்படி சொன்னார்கள். உஷ்ணம் அதிகரிப்பு-சீதோஷ்ண நிலைமாற்றம்-உணவு வித்தியாசம் போன்றவற்றினால் இந்த நோய்-என்றார் டாக்டர்.

மனைவியும் நண்பர் சிவாவும் இவற்றைச் சாப்பிட விரும்பவில்லை. அத்துடன் காப்பியை மட்டுமே அவர்கள் உட்கொண்டனர். தயிர் சாப்பிட்டால்சன்னியாக்கிவிடுமென்று இவர்கள் பயந்தார்கள்.

என்னைப் பொறுத்தமட்டில் நான் மிகவும் களைத்திருந்தேன்-ஏதாவது சாப்பாடின்றி தொடர்ந்து நடமாட முடியாத நிலை-எனக்கு!

தயிரும் சோறும் சாப்பிட்டேன்! உடனடியாக நின்றது வயிற்றோட்டம். ஓரிரு தினங்களில் வழமைக்குத் திரும்பினேன். தொடர்ந்து மனைவியும் நண்பர் சிவாவும் இதனை கடைப்பிடித்தனர். இருந்தும் அவர்களுக்கு நிற்கவில்லை.

கடைகளில் ஏதும் குடிப்பதை நிறுத்தும்படி டாக்டர் ஆலோசனை கூறினர். ஹோட்டல்காரர் மின்சார கேற்றில் தந்துதவினர்கள். சட்டிபேணி, சீனி, ஹார்லிக்ஸ் கரண்டி முதலியவற்றை வாங்கி அறையிலேயே காப்பிதயாரித்தோம். மனைவிக்கு அசைய முடியாத வருத்தம்!

அதிகாலை 5 மணிக்கெல்லாம் படுக்கையிலிருந்து நான் எழுந்துவிடுவேன். உடனேயே தண்ணீரைக் கொதிக்கவைத்து ஹார்லிக்ஸ் தயாரித்து மனைவிக்கும் கொடுத்து 3வது மாடியில் இருக்கும் நண்பர் சிவாவுக்குக் கொண்டு செல்வேன். இவ்விதமாக சில நாட்கள் மனைவிக்கும் நண்பர் சிவாவுக்கும் பணிவிடை செய்தேன். 19ம் திகதி மட்டில் ஓரளவு சுகமடைந்ததும் நாடு திரும்பும் ஆசை எம்மைவாட்டியது.

உடல் களைத்திருந்ததில் திருச்செந்தூர் திட்டத்தை கைவிட்டோம். மேலும் ஓரிரு நாட்கள் தங்கி அண்ணாசிலை, மாமல்லபுரம், வள்ளுவர்கோட்டம், சென்னை மரினாகடற்கரைமுதலியவற்றுக்குச்சென்று விட்டு, சென்னை மூர்மார்க்கட், சைனாபஜார் போன்றவற்றைப் பார்க்கமுடிவு செய்தோம்.

இதற்கிடையில் 18ந் திகதி இரவு சுமார் 10 மணியிருக்கும்

இரகசிய பொலிசார் எம்மைத் தேடுவதாக ஹோட்டல்காரர் வந்து சொன்னார். நானும் மனைவியும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு எமக்கு சென்னையில் பழக்கப்பட்ட ஒருவர் கூட்டில் நின்று கொண்டிருந்தார்! (தொடரும்)


நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
பால நாகம்மா


ராஜ்குமார் பிலிம்ஸ்

# பொன்மணி

## விமர்சனம்

ரோமியோ அன்ட் ஜூலியட் என்ற கதை பல தடவைகளில் படமாகத் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

இது பலதடவைகளிலும் பாராட்டும் பெற்றுள்ளது.

இதேபோல் அம்பிகாவதி அமராவதி கதையும், லைலா மஜ்னு கதையும் பல தடவைகள் தயாரிக்கப்பட்டன.

சில வருடங்களுக்குமுன் ரோமியோ அன்ட் ஜூலியட் புதிதாகத் தயாரிக்கப்பட்டபொழுது அந்தக் கதையை எழுதிய கதாசிரியர் கற்பனைசெய்த வயதுக்கேற்ற இளைஞர்களைத் தேடி எடுத்துப் படத்தைத் தயாரித்தார்கள்.

தமிழ்ப் படங்களில் பொதுவாக பிரபல்யமான நடிகர்களையும் நடிகைகளையும் வைத்தே படம் தயாரிக்கப்படும் நிலை வந்துள்ளதால்அந்தந்தப் பாத்திரங்களின் வயதுக்கேற்ற நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுத்துப் படம் தயாரிப்பது அரிது.

இப்பொழுது இலங்கையில் புதிதாகத் தயாரித்து வெளிவந்திருக்கும் ராஜ்குமார் பிலிம்சாரின் 'பொன்மணி'யின் கதாநாயகனையும் கதாநாயகியையும் அந்தப் பாத்திரங்களுக்கேற்ற வயதுத் துடிப்புடன் தேர்ந்தெடுத்ததைப் பாராட்டவேண்டும்.

யாழ்ப்பாணப் பகுதியில் இன்றும் நிலைபெற்று நிற்கும் சீதனம். சாதி, சமயப்பிரச்னைகளை வைத்து பிரபல எழுத்தாளர் காவலூர் ராஜதுரை கதை வசனம் எழுதியுள்ள 'பொன்மணி'யில் டாக்டர்கள், என்ஜினியர்கள்,உயர்ந்த பதவிகளிலுள்ளவர்களை நடிக்க வைத்தது ஒரு பெருமையாகக் கொள்ளலாமென்பது மட்டுமல்ல, அவர்களைப் பொறுத்தவரையில் பாத்திரத்திற்குப் பொருத்தமாகத் தமது கடமையைச் சரிவரச்செய்திருக்கிறார்களென்றே சொல்லலாம்.

ஆனால் தொழில் நுட்பத் துறையில் ஒலி, ஒளியமைப்பும் கதாபாத்திரங்களை நகர்த்துவதற்குமாறாக மோட்டார் கார், படகுகள், சைக்கிள்கள் ஆகியவற்றை நீண்ட தூரம் நகர்த்துவதில் ஈடுபட்டது ரசிகர்களைப் பொறுத்தவரையில் ஒரு சோதனைதான்!

இரண்டொரு பாடல்கள்தான். கதாநாயகன், கதாநாயகியைக் கஷ்டப்படுத்தவில்லை. நல்ல பாடல்கள்.

இதற்காக சில்லையூரையும் காவலூரையும் போற்றவேண்டும்.

உள்ளூர் சரக்கைப் போற்றி வரவேற்கும் மனப்பான்மை நமது நாட்டில் இன்னமும் வளரவில்லையென்பது உண்மைதான்.

ஆனாலும் சர்வதேசரீதியில் 'பொன்மணிக்கு' இலட்சிய ரீதியில் தகுந்ததோர் இடமுண்டு.

உள்நாட்டைப் பொறுத்தவரையில் கதையம்சத்துக்காக ஒருதடவை பார்க்கவேண்டியது நமது கடமை.

—திரைவண்டு

# யாழ்பூங்கா...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கஸ் றிங் மாஸ்டர்; மற்றவர் மிருகங்களைப் பழக்கும் மாஸ்டர். இதற்குள் மாநகர சபைக்கு அருகாமையிலுள்ள ''வாடிவீட்டு' மனேஜருக்கு ஒரு யோசனைத்தோன்றிற்று. பூங்காவில் பதுங்கிக்கொண்டிருக்கும் கரடி சர்க்கஸ்கரடி. அதற்கு சிலவேளைகளில் எழுத்துக்களை வாசிக்கவும்தெரிந்திருக்கும்! அதையும்கூட சர்க்கஸ் கம்பனிக்காரர் பழக்கியிருப்பார்கள்தானே! அதனால் வாடி வீட்டின் வாயிலின்மேலே வைக்கப்பட்டுள்ள போர்டை கழட்டி இறக்கும்படி ஊழியர்களைப் பணித்தார் மனேஜர் ஏனென்றால் ''வாடி வீடு'' என்பதைக் கரடி படித்தால்,ஏதோ தன்னை வரச்சொல்லித்தான் 'வாடி' என்று அன்புடன் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டு உள்ளே நுழைந்துவிட்டால் என்னசெய்வது? ''வாடி இதுதான் வீடு'' என்று சொல்லி அழைக்குமாபோல அல்லவா தமிழில் போர்டு காணப்படுகிறது. கரடியைப் பிடித்து அடைக்கும்வரை போர்ட்டைக் கழற்றிவைக்கும்படி உத்தரவு போட்டார் மனேஜர்.

இவ்வாறு நகரம் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும்போது பூங்காவில் கரடியைப் பிடிப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக நடந்துகொண்டிருந்தன.

(தொடரும்)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு அராலி மேற்கு கந்தஞானியார் கோவில் சிவபெருமானுக்குச் சகஸ்ரசங்காபிஷேகம் ஏப்ரல் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும். அன்று மாலை 7 மணிக்கு லட்சார்ச்சனை பூர்த்தியும் இரவு 10 மணிக்கு நடேசப்பெருமான் முத்துச் சப்பரத்தில்வீதிவலம்வருதலும் இடம்பெறும். ......

# இன்றும் ஜவுளி பெறலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு புதுவருடத்தை ஒட்டி யாழ். மாநகர பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகளில் இன்றும் கூப்பன் புள்ளிகளுக்கு ஜவுளிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சங்கத்தலைவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் தெரிவித்தார். (க)

# அச்சு . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கும் வாராந்த பத்திரிகையாகும். 1856ம் ஆண்டளவில் 'தினவர்த்தமானி' என்ற பத்திரிகை, பேர்சிவல் ஐயரால் ஆரம்பிக்கப்பட்டது. 1861ம் ஆண்டு 'தேசோபகாரி' என்ற பத்திரிகை வெளியானது. இது சகலராலும் விரும்பி வாசிக்கப்பட்ட பத்திரிகையாகும்.

1876ம் ஆண்டு கத்தோலிக்க பாதுகாவலன் என்னும் பத்திரிகை வெளியானது. இதுவும் இன்றுவரை வெளிவருகிறது. இவற்றைவிட காலத்துக்குக் காலம் பல்வேறு பத்திரிகைகளும் தோன்றின. சில மறைந்துவிட்டன. சில இன்னமும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவற்றுள், தத்துவபோதினி, சத்திய வேதக்கொடி, தீர்க்க தரிசன வர்த்தமானி, நல்ல சமாரியன், புதுயிர், மெதடிஸ்த சாட்சி, மெதடிஸ்த றெக்கோட், கிறிஸ்தவ தீபிகை, மறைஒளி என்பன சிறந்த கிறிஸ்தவ தமிழ்ப் பத்திரிகைகளாம். இப் பத்திரிகைத் தொண்டின் பயனாகவே தமிழ்மொழியில் ஏராளமான நாளாந்த வாராந்த மாதாந்த பத்திரிகைகள் வெளிவரலாயின.

இவ்வாறு பத்திரிகை உலகிலே முன்னின்று தமிழ்மொழியைத் திறம்பட வளர்த்தோர் கிறிஸ்தவ தொண்டரேயாம்.

(தொடரும்)

## சட்டமும் சமூகமும்—(12)

# கிரிமினல், சிவில் சட்டங்கள்

குற்றவியல் சட்டம் (கிரிமினல் சட்டம்) குடியியல் சட்டம் (சிவில் சட்டம்) என்ற விடயங்கள் நமக்குப் புதியவை அல்ல. ஆனாலும், குற்றவியல் தவறு, குடியியல் தவறு என்ற சங்கதிகள் சில சமயங்களில் நமக்கு மலைவை ஏற்படுத்துதல் இயல்பு. ஆங்கிலத்தில் உள்ள Crime, Civil wrong என்ற சொற்களில் உள்ள திட்பமும், நுட்பமும், தமிழ்ச் சொற்களான குற்றவியற்றவறு, குடியியற்றவறு ஆகிய சொற்களில் இல்லாமை, இம் மலைவுக்குக் காரணமாகஇருக்கலாம்.

சொற்கள் மட்டுமல்லாமல் பொருளைப் பொறுத்தவரையிலும் சிவில் தவறு, குற்றவியல் தவறு என்பனவற்றுக்கிடையே சில சிக்கல்கள் உள்ளன. அவற்றைச் சற்று விளங்கிக்கொள்ளுதல் பயன்தரும்.

ஒருவர் செய்கின்ற பிழையான செயல் குற்றவியல் சார்ந்த தவறு, குடியியல் சார்ந்த தவறு, என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? ஒருவர் செய்கின்ற பிழையானசெயலை வைத்து அது குற்றவியற்றவறு என்றோ, குடியியற்றவறு என்றோ கூறிவிடமுடியாது. ஏனென்றால் ஒருவரால் செய்யப்படுகின்ற பிழையான செயல் (Wrongful Act.)குற்றவியற்றவறாகவும் குடியியற்றவறாகவும் இருக்கமுடியும். அதாவது ஒரே செயல் இரு தவறுகளாகவும் அமைதலும் கூடும். குழப்பமாக இருக்கிறதா?குழம்பாதீர்கள். உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன். இன்று காலை யாழ்தேவியில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட நீர் பிற்பகல் 2-25 அளவில் கொழும்புக் கோட்டைக்கு வந்து சேர்கிறீர் என்று வைத்துக்கொள்வோம். கோட்டையில் இறங்கிய நீர், நீர் கொண்டுவந்த சூட்கேசை ஒரு 'போட்ட'ரிடம் தூக்கிவரும்படி ஒப்படைக்கிறீர். போட்டர், நீர் கொழும்புக்குப் புதியவர் என்பதை எப்படியோ அறிந்து, சூட்கேசோடு ஒடி மறைந்துவிடுகிறார். இங்கே அந்தப் போட்டர் திருடுதல் ஆகிய குற்றத்தைப் புரிந்துள்ளார் என்பதோடு, வேறு இரண்டு குடியியற்றவறுகளையும் புரிந்துள்ளார். ஒப்படைத்த சூட்கேசை தமக் காக்கிக்கொள்ளும் கருத்துடன் எடுத்துச்சென்றது திருட்டுக் குற்றம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் அவர் இரண்டு குடியியற்றவறுகளையும் புரிந்துள்ளார் என்று கூறுவதைக் கேட்டதும் உங்களுக்குக் குழப்பமாக இருக்கிறது. ஆனால் குழப்பமடைய வேண்டியதில்லை. உங்களுடைய சூட்கேசைத் தூக்கிவந்து தருவதாக அந்தப் போட்டர் உங்களோடு உட்கிடையான ஓர் ஒப்பந்தத்தைச் செய்துவிட்டு, அந்த ஒப்பந்தத்தைநிறைவேற்றாமல் விட்டது ஒரு குடியியல் தவறு ஆகும். இன்னுமொரு குடியியற்றவறையும் அந்தப் போட்டர் புரிந்துள்ளார். அதாவது, தமக்கு உரிமையில்லாத பொருளை உமதுஉரிமைக்குப் பங்கமான முறையில் தம்முடையதாக்கிக் கொள்ளுதலாகிய தீங்கியலின்பாற்பட்ட தவறையும் அந்தப் போட்டர் புரிந்துள்ளார். இவ்வாறாக அந்தப் போட்டர் செய்த ஒரே செயல், மூன்று தவறுகளாக (குற்றவியற்றவறு, ஒப்பந்தத் தவறு, தீங்கியற்றவது) அமைவதைக் காண்கின்றோம். இத்தகைய சந்தர்ப்பத்தில் அந்தப் போட்டருக்குஎதிராக இரண்டு விதமான நடவடிக்கைகளை நீர் எடுக்கமுடியும்; திருடினார் என்பதற்காகத் தண்டனைச்சட்டக் கோவையின் 366 ஆம் பிரிவின் கீழ் குற்ற வழக்குத் தொடுப்பது ஒரு நடவடிக்கை; ஒப்பந்தம் மீறுகைக்காகவும் தீங்கியற் செயலுக்காகவும் குடியியல் வழக்குத் தொடுப்பது மற்ற நடவடிக்கை.

மேற்படி உதாரணத்திலே, சொல்லப்பட்ட மூன்று தவறுகளுக்காகவும் நீர் ஒருவரே அந்தப் போட்டருக்கெதிராக வழக்குத் தொடுக்கின்றீர். நீர் தொடுக்கும் குற்றவியல் வழக்கில்நீர்வெற்றிபெற்றால்அந்தப் போட்டரை மறியலுக்கு அனுப்பமுடியும். நீர் தொடுக்கும் குடியியல் வழக்கில் நீர் வெற்றிபெற்றால் அந்தப் போட்டரிடமிருந்து சேதவீடு (Damages) பெறமுடியும்.

இன்னுமோர் உதாரணத்தைப் பார்ப்போம். புகைவண்டி நிலையத்தில், சமிக்ஞை காட்டும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவன், அசிரத்தையாகவும் அசதியாகவும் இருந்ததன் விளைவாக, அவனுடைய பொறுப்பின் கீழ் இருந்த தண்டவாளத்தில் விபத்து

செ. சிறீக்கந்தராசா

ஒன்று ஏற்படுகின்றது. சமிக்ஞை காட்டவேண்டியவரின் கவனக்குறைவு ஒரு விதத்தில் (1) மனித உயிர் போக்கலாகிய குற்றமாகவும், மற்றொரு புறத்தில் (2) விபத்தில் மாட்டிக்கொண்டோரைப் பொறுத்தவரையில் ஒரு தீங்காகவும், (3) இலங்கை அரசாங்கதனைதப் பொறுத்தவரையில் ஓர் ஒப்பந்த மீறுகையாகவும் அமைகின்றது. இந்த உதாரணம் முன்னைய உதாரணத்தைவிடச் சற்று வேறுபட்டது. முதலாவது உதாரணத்தில்,ஒப்பந்தத்துக்காகவும் தீங்குக்காகவும் வழக்குத் தொடுக்கும் உரிமை உமக்கு மட்டுமே இருந்தது. ஆனால் இந்த உதாரணத்திலே தீங்குக்காக அந்த சமிக்ஞைக்காரனுக்கெதிராக வழக்கெடுக்கும் உரிமை விபத்துக்குள்ளானோரிடம் இருக்கிறது.ஒப்பந்தத்தை மீறியமைக்காக வழக்குத் தொடுக்கும் உரிமை அரசாங்கத்திடமிருக்கிறது.

எனவே ஒரு செயலை வைத்து அச்செயல் குற்றவியற்றவறு, குடியியற்றவறு என்று கூற முடியாதென்பதையே முன்னே கூறிய உதாரணங்கள் காட்டுகின்றன. ஆகவே விளைகின்ற சட்ட விளைவு என்ன என்பதைப் பொறுத்தே ஒரு செயல் குற்றவியற்றவறு குடியியற்றவறு என்பதைக் கூற முடியும்.

இழைக்கப்பட்ட பிழையான செயலுக்காகக் குற்றவியல் நடவடிக்கை எடுக்க முடியுமானால் அப்பிழையான செயல் குற்றம் எனப்படும். அந்தப் பிழையான செயலுக்காகக் குடியியல் நடவடிக்கை எடுக்கமுடியுமானால் அது குடியியற்றவறு எனப்படும். அந்தப் பிழையான ஒரு செயலுக்காக குடியியல் நடவடிக்கை, குற்றவியல் நடவடிக்கை ஆகிய இரண்டு நடவடிக்கைகளையும் எடுக்கமுடியுமானால் அச்செயல் ஒரே சமயத்தில் குற்றமாகவும் குடியியல் தவறாகவும் கொள்ளப்படும்.

ஒரு வழக்கு குற்றவியல் வழக்கா குடியியல் வழக்கா என்பதை அது நடைபெறும் நீதிமன்றத்தைவைத்து இன்று இனங்காணமுடியாது. முன்பெல்லாம், இலங்கையில் நீதவான் நீதிமன்றங்கள் குற்றவியல் வழக்குகளை மட்டுமே விசாரித்தன. இந்த விதிக்கு விதிவிலக்காக அது விளங்கிய குடியியல் வழக்கு பராமரிப்புப் பற்றிய வழக்கு ஒன்றுமட்டுமே. ஆனால் இன்றோ குடியியல், குற்றவியல் ஆகிய இருவகை வழக்குகளையும் நீதவான் நீதிமன்றம் விளங்கித் தீர்ப்பளிக்கின்றது. 1974ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலவிய விண்ணப்ப நீதிமன்றம், குடியியல் வழக்கை மட்டுமே விளங்கி வந்தது. ஆனால் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டம் அந்த நீதிமன்றத்தை ஒழித்துவிட்டது.

வழக்கிலே கையாளப்படும் சொற் பிரயோகம், நடவடிக்கை முறை, வழக்கின் தீர்ப்பு என்பனவற்றை வைத்தும் அவற்றை இனங்கண்டு கொள்ளமுடியும். இந்த விபரங்களை அடுத்த கட்டுரையில் காண்போம்.

## நூலகத்தில் நடந்ததாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பொதுசன நூலகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை காலை சுமார் 10 மணியளவில் சிலர் கூடியிருந்து மதுபானம்அருந்தி அங்கு படித்துக்கொண்டிருந்த இளைஞர்களுக்கு இடைஞ்சல் விளைவித்ததாகக் கூறப்படுகின்றது.

அங்கு ஏற்கனவே இருந்து படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் வெளியேற்றப்பட்டதின்பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக புகார் கூறப்படுகின்றது.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

## வையகமும் துயர் தீர்கவே!

### (துலாம்)

வருகிற புதன்கிழமையன்று இந்து-சிங்கள புத்தாண்டு பிறக்கிறது. வருடத்தில் பல புத்தாண்டுகள் பிறக்கின்றன. ஒவ்வொரு புத்தாண்டன்றும் வாழ்த்துச் சொல்லுவதும் வாழ்த்து மடல்களை அனுப்புவதும் நம்மில் பலருக்கும் வழக்கமாகிவிட்டது.

என்றாலும் சென்றுபோன ஆண்டில் நடந்தவற்றைத் திரும்பிப் பார்க்கையில் துயர்தாம் அதிகமேயன்றி நன்மை மிகவும் குறைவே என்பது விளங்கும்.

துயர்தீர நாம் என்னசெய்ய வேண்டும்? வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் கூறுவதால் மட்டும் நம் துயர்கள் போய் விடுமா? துயரில்லாதவர் யாரும் நம்மிடையே உண்டா?

திருஞானசம்பந்தசுவாமிகள் நமக்குத் துயர்தீரும்வகையைச் சொல்லுகிறார். "எல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே" வையத்துத் துயர் தீர இறைவனின் நாமம் எங்கும் எல்லாம் சூழ வேண்டுமென்கிறார்.

இது உண்மையா? ஆண்டவன் பெயரை விடாமல் சொன்னால், இமைப்பொழுதும் எம் நெஞ்சில் இறைவனை நீங்காமல் வைத்திருப்பின் நம் துயர் தீர்ந்துவிடுமா? நம்பமுடியவில்லையே!

ஏன் சொல்லித்தான் பார்ப்போமே. காசு பணம் செலவா? நம்பிக்கையுடன் சொல்லுங்கள். முருகனை முருகா என்றோ சிவ சிவா என்றோ, அல்லா அல்லா என்றோவிடாமல்சொல்லுங்கள். சரி ஐந்து நிமிடம் பத்து நிமிடம்சொல்லுவோம். மனதில் ஏதோ எண்ணங்கள் குறுக்கிடுகின்றன. இறைவன் பெயர் மறந்துவிடுகிறது மறந்ததும் கவலைகள்வந்து தாக்குகின்றன.

துயருக்கும், கவலைகளுக்கும் மனம்தான் காரணம். மனம் ஒரு பெரிய குரங்கு. அதை அரைநிமிடநேரமும்நிற்பாட்ட முடியாமலுள்ளதே. சிந்தனை அடக்கியே சும்மா இருக்க முடியவில்லையே.என்செய்வது?

திருவருள்கூட்ட குரு அருள் வேண்டும்.பெரியோர்கள் கூறியுள்ள வழிகளை நம்பிக்கையுடன் பின்பற்றினால் மனமடங்க வழிபிறக்கும். மனமடங்க துயரும் அடங்கும். நமது குரவர்கள் கூறிய ஐந்தெழுத்து முதலிய மந்திரங்களை ஜெபிக்க ஜெபிக்க மனமடங்கி நம் துயரும் தீரும்.

நம் துயரெல்லாம் தீர, பிறக்கும் புத்தாண்டிலே நால்வர் காட்டிய வழியிலே இறை நாமமே நமக்குள்ளும், எங்கும் சூழச்செய்வோம். இறை அருளால் துயரனைத்தும் நீங்கி,இன்பமே எந்நாளும் துன்பமில்லாப் பெருவாழ்வு வாழ்வோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

### ஒருவார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர். திருமதி செல்வநாயகம் ஆஸ்பத்திரியிலேயே தங்கியிருந்துவருகிறார்.

தினமும் மக்கள் வந்து பார்வையாளர் பதிவுப்புத்தகத்தில் கையெழுத்து போட்டுவருகின்றனர். அவசர தேவை ஏற்பட்டால்தான் மூளைநரம்பு சத்திர சிகிச்சைநிபுணர் அழைக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டது.

### பாக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நடைபெற்ற தேர்தலை அடுத்து புதிய மாநில சட்ட சபைகள் கூட்டப்படுவதை ஆட்சேபித்தே எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதே 12 பேரும் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

## மரண அறிவித்தல்

### கா. பொ. திருநாவுக்கரசு

கல்வியங்காட்டைச் சேர்ந்த கா. பொ. திருநாவுக்கரசு காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் டாக்டர் சிவானந்தராசா (U. S. A.), விமலாதேவி, விஜயதேவி ஆகியோரின் தந்தையும் செல்வரத்தினம் (பொறியியலாளர்), பரராசசிங்கம் (பொறியியலாளர்), நளாயினி (ரதி) ஆகியோரின் மாமனும், புலிலிங்கம், தெட்சணாமூர்த்தி ஆகியோரின் சகோதரரும் சுதாகரன், ஆர்த்தி, அபர்ணா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (10-4-77) மாலை 3 மணிக்கு அன்னசத்திர ஒழுங்கையிலுள்ள 6-ம் இலக்க இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு இறுதிச் சடங்குக்காக எடுத்துச் செல்லப்படும்,

5901

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் ஆறுமுகம்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த இளைப்பாறிய கொழும்பு சுங்க இலாகா உத்தியோகத்தர் இராமலிங்கம் ஆறுமுகம் காலமாகிவிட்டார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர் ஜெயக்குமாரின் அன்புத் தந்தையும், திருமதிகள் நடராஜா, இராசதுரை, செல்வி கனகேஸ்வரி (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் சமக்கிரியைக்காக இன்று (ஞாயிறு) பிற்பகல் 3 மணியளவில் 619, கே. கே. எஸ். வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

5902

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.